# சோதிடமலர்

SOTHIDA MALAR






விபவ ஹூ ஆனி மீ (15-6-88—15-7-88) ரூபா: 4-00

உ

# சோதிடமலர்
SOTHIDA MALAR

மலர் 11 ✻ இதழ் 3

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

✻

விபவ ஸூ ஆனி மீ
( 15 - 6 - 88 )

கவபூஸ்ர மாத்ருகாவிந உஜாயதாக்ஷம்
கவபூஸ்ர ஸ்ரீதஜஷ்ரூஷம் கரணாவி
[ஞாஸ॥
வந்த்ராயபூ ஸெவாஉநஷ ஹணாவிராஉம்
ஜந்த்ராஹ்ரி ஷெவவஷ வங்கஜ ஷீஸஷீஷெ॥

✻ ✻ ✻ ✻

எழுதரு மறைகள் தேருத இறைவனை எல்லில் கங்
[குல்
பொழுதறு காலத்து என்றும் பூசனை விடாது
[செய்து
தொழுதகை தலைமேல் ஏறத் துளும்பு கண்ணீ
[ருள் மூழ்கி
அழுதடி யடைந்த அன்பன் அடியவர்க் கடிமை
[செய்வாம்.

## காலன் காமன்

துக்கங்கள் துன்பங்களுக்கெல்லாம் காரணம் பிறவிதான். இனி பிறக்காவிடில் சவலை இல்லை. பணம் வேண்டில் பணக்காரனிடம் செல்வது போல பிறப்பு வேண்டாமெனில் பிறப்பில்லாதவனிடம்தான் போக வேண்டும். பிறப்பு வேண்டாதது போல இறப்பும் கூடாததே, இறந்தால் மறுபடியும் பிறவி எடுக்கத்தான் வேண்டும். இறப்பைப் பெறுமல் இறைவனுடன் ஐக்கியமாகி விடவேண்டும். அப்போது பிறப்புக் கிடையாது. பிறப்புககுக் காரணம் காமன். இறப்புக்குக் காரணம். காலன் காமனையும் காலனையும் வென்றுமாஞல் அப்புறம் தோற்றமுமில்லை. முடிவுமில்லை. அதனுலேதான் காலனைக் காலால் உதைத்தவரும், காமனைக் கண்ணுல் எரித்தவருமான இறைவனைச் சரணடைய வேண்டும்.

## உத்திர நன்ஞள்

வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி, வானுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் கோனுகிக் கோயில் கொண்டானை வாழ்த்துவதும் வழிபடுவதும் எம்மனேர்க்குரிய தொன்ருகும். ஆலவாயழகனை ஆனிமாத உத்திர நன்ஞளில் அபிஷேகப் பிரியனுக, அலங்கார ரூபனுக தர்சிப்பதற்கு நடராஜ மூர்த்தமே சிறந்ததாகும். இம்மூர்த்திக்கு அபிஷேகத்திற்குரிய காலங்கள் ஆறு. நாள்தோறும் ஆலயத்தில் நடைபெறும் பூஜாகாலங்கள் வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அர்த்தயாமம் என்பன. ஒருநாளில் பிரிவுபடும் இக்காலங்கள் தேவர்களின் ஒருநாளாகும். ஒருவருடம் ஆறுகாலப் பூசைக்குரியதாகும் போது வைகறை மார்கழியாகவும், காலை மாசியாகவும், உச்சிக்காலம் சித்திரையாகவும், மாலைக்காலம் ஆனியாகவும், இரவு ஆவணியாகவும், அர்த்தயாமம் புரட்டாதி மாதமாகவும் கொள்ளப் படுகின்றன. இதன் பிரகாரம் ஆனிமாத உத்திர நட்சத்திர தினம் நடேசப் பெருமானின் ஆறு அபிஷேக காலங்களில் மாலைக்கால அபிஷேக தினமாகி இரவு முழுவதும் அபிஷேகத்தில் மூழ்கியவராய் உதயத்தில் அலங்கார பூஷணுக பக்தர்களுக்கு காட்சி தரும் பேறுக்குரியதாகின்றது. இக்காட்சி தில்லைச் சிதம்பரத்தில் இன்றும் கிடைக்கின்றது. ஆனி உத்தர தர்சனமும், மார்கழி ஆர்த்திரா தர்சனமுமே நடராஜப் பெருமானை சிவகாமி சமேதராக, ரதத்தில் காட்சியளிப்பவராக காண்பதற்கு ஏற்ற காலங்களாக விளங்குகின்றன.

# விபவ வருஷ ஆனி மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5 30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனும்சம் 23 பா 41கலை 45விகலை)

| தேதி ஜூன் | தேதி ஆனி | நாக்ஷத்ர நேர (பகல் 12-00) ம நி. செ | சூரியன் ☉ ரா பா க | சந்திரன் ☽ ரா பா க | செவ்வாய் ♂ ரா பா க | புதன் ☿ ரா பா க | குரு ♃ ரா பா க | சுக்கிரன் ♀ ரா பா க | சனி ♄ ரா பா க | ராகு ☊ ரா பா க | யுரேனஸ் ♅ ரா பா க | நெப்டி ♆ ரா பா க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | 5 35 2 | 2 0 25 | 2 7 44 | 10 20 55 | 1 27 38 | 0 28 58 | 1 27 16 | 8 5 57 | 10 24 40 | 8 5 34 | 8 15 32 |
| 16 | 2 | 5 38 59 | 1 22 | 2 20 22 | 21 30 | 27 6 | 29 11 | 26 39 | 5 53 | 24 37 | 5 32 | 15 30 |
| 17 | 3 | 5 42 55 | 2 20 | 3 2 46 | 22 5 | 26 36 | 29 25 | 26 3 | 5 49 | 24 34 | 5 29 | 15 28 |
| 18 | 4 | 5 46 52 | 3 17 | 3 14 55 | 22 40 | 26 8 | 29 38 | 25 28 | 5 44 | 24 31 | 5 27 | 15 27 |
| 19 | 5 | 5 50 49 | 4 14 | 3 26 53 | 23 15 | 25 43 | 0 29 51 | 24 53 | 5 40 | 24 28 | 5 24 | 15 25 |
| 20 | 6 | 5 54 45 | 5 12 | 4 8 44 | 23 49 | 25 20 | 1 0 3 | 24 21 | 5 35 | 24 25 | 5 22 | 15 24 |
| 21 | 7 | 5 58 42 | 6 9 | 4 20 32 | 24 24 | 25 2 | 0 16 | 23 50 | 5 31 | 24 22 | 5 19 | 15 22 |
| 22 | 8 | 6 2 38 | 7 6 | 5 2 22 | 24 58 | 24 47 | 0 29 | 23 20 | 5 26 | 24 18 | 5 17 | 15 21 |
| 23 | 9 | 6 6 35 | 8 3 | 5 14 19 | 25 32 | 24 36 | 0 42 | 22 52 | 5 22 | 24 15 | 5 15 | 15 19 |
| 24 | 10 | 6 10 31 | 9 0 | 5 26 29 | 26 5 | 24 29 | 0 54 | 22 27 | 5 17 | 24 12 | 5 12 | 15 17 |
| 25 | 11 | 6 14 28 | 9 58 | 6 8 57 | 26 39 | 24 27 | 1 7 | 22 3 | 5 13 | 24 9 | 5 10 | 15 16 |
| 26 | 12 | 6 18 24 | 10 55 | 6 21 46 | 27 12 | 24 30 | 1 20 | 21 42 | 5 9 | 24 6 | 5 7 | 15 14 |
| 27 | 13 | 6 22 21 | 11 52 | 7 5 1 | 27 45 | 24 37 | 1 32 | 21 22 | 5 4 | 24 3 | 5 5 | 15 12 |
| 28 | 14 | 6 26 18 | 12 49 | 7 18 41 | 28 18 | 24 49 | 1 45 | 21 5 | 5 0 | 24 0 | 5 2 | 15 11 |
| 29 | 15 | 6 30 14 | 13 46 | 8 2 44 | 28 50 | 25 6 | 1 57 | 20 51 | 4 56 | 23 56 | 5 0 | 15 9 |
| 30 | 16 | 6 34 11 | 2 14 44 | 8 17 7 | 10 29 22 | 1 25 28 | 1 2 9 | 1 20 39 | 8 4 51 | 10 23 53 | 8 4 58 | 8 15 8 |
| ஜூலை 1988 1 | 17 | 6 38 7 | 2 15 41 | 9 1 43 | 10 29 54 | 1 25 55 | 1 2 21 | 1 20 29 | 8 4 47 | 10 23 49 | 8 4 55 | 8 15 6 |
| 2 | 18 | 6 42 4 | 16 38 | 9 16 25 | 11 0 26 | 26 26 | 2 33 | 20 22 | 4 43 | 23 46 | 4 53 | 15 4 |
| 3 | 19 | 6 46 0 | 17 35 | 10 1 6 | 0 58 | 27 3 | 2 45 | 20 17 | 4 38 | 23 43 | 4 50 | 15 3 |
| 4 | 20 | 6 49 57 | 18 32 | 10 15 39 | 1 29 | 27 44 | 2 57 | 20 14 | 4 34 | 23 40 | 4 48 | 15 1 |
| 5 | 21 | 6 53 53 | 19 30 | 11 0 1 | 2 0 | 28 29 | 3 9 | 20 14 | 4 30 | 23 37 | 4 46 | 15 0 |
| 6 | 22 | 6 57 50 | 20 27 | 11 14 9 | 2 30 | 29 20 | 3 21 | 20 16 | 4 26 | 23 34 | 4 43 | 14 58 |
| 7 | 23 | 7 1 47 | 21 24 | 11 28 3 | 3 0 | 2 0 15 | 3 33 | 20 20 | 4 22 | 23 31 | 4 41 | 14 56 |
| 8 | 24 | 7 5 43 | 22 21 | 0 11 43 | 3 30 | 1 14 | 3 45 | 20 27 | 4 17 | 23 28 | 4 39 | 14 55 |
| 9 | 25 | 7 9 40 | 23 18 | 0 25 8 | 4 0 | 2 18 | 3 56 | 20 36 | 4 13 | 23 25 | 4 36 | 14 53 |
| 10 | 26 | 7 13 36 | 24 16 | 1 8 20 | 4 29 | 3 26 | 4 8 | 20 47 | 4 9 | 23 22 | 4 34 | 14 51 |
| 11 | 27 | 7 17 33 | 25 13 | 1 21 20 | 4 58 | 4 39 | 4 19 | 21 0 | 4 5 | 23 18 | 4 32 | 14 50 |
| 12 | 28 | 7 21 29 | 26 10 | 2 4 7 | 5 27 | 5 56 | 4 30 | 21 14 | 4 1 | 23 15 | 4 30 | 14 48 |
| 13 | 29 | 7 25 26 | 27 7 | 2 16 42 | 5 55 | 7 17 | 4 41 | 21 31 | 3 57 | 23 12 | 4 28 | 14 47 |
| 14 | 30 | 7 29 22 | 1 28 5 | 2 29 5 | 11 6 23 | 2 8 42 | 1 4 53 | 1 21 50 | 8 3 54 | 10 23 9 | 8 4 25 | 8 14 45 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுகளை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விளையாட்டுப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஆனி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 5 மணி 53 நிமிஷம்)

| வாரம் | 5...53 6...53 | 6...53 7...53 | 7...53 8...53 | 8.. 53 9...53 | 9...53 10...53 | 10...53 11...53 | 11...53 12...53 | 12...53 1...53 | 1...53 2...53 | 2...53 3 . 53 | 3.. 53 4...53 | 4.. 53 5.. 53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பனத மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்;

# நாள் சுபமா?

ஆனி 1 புத (15 6-88) பிரதமை பகல் 3-04 வ. திருவாதிரை பி.இ. 4-48 வரை, சித்தம், சந்திர தரிசனம், கரிநாள், அவசிய கருமங்கள் செய்ய லாம். ராகு 11-57—1-31

ஆனி 2 வியா (16-6 88) துவிதியை பகல் 3-57 வ. புனர்பூசம் முழுவதும், அமிர்தம், நற்கருமங்க ளுக்கு உகந்ததினம். ராகு 1-23—2-57

ஆனி 3 வெ (17-6 88) திரிதியை மாலை 5-23 வரை புனர்பூசம்-சித்தம் காலை 6-38 வரை, காலை6-38 இற்கு முன் சுபகருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 10-23—11-57

ஆனி 4 சனி (18-6-88) சதுர்த்தி மாலை 7-20வரை பூசம்-சித்தம் காலை 9-00 வரை, சதுர்த்திவிரதம், சுபகருமங்கட்கு உகந்த தினமன்று. ராகு 8-54—10-28

ஆனி 5 ஞாயி (19-6-88) பஞ்சமி இரவு 9-40 வ. ஆயிலியம் - சித்தம பகல் 11-48 வரை. அசுப தினம். ராகு 4 24—5-58

ஆனி 6 திங் (20-6 88) ஷஷ்டி பி.இ. 12-13வரை, மகம்-மரணம் பகல் 2-52 வரை; ஷஷ்டி விரதம், கரிநாள், சுபகருமங்களை விலக்குக. ராகு 7-24—8-58

ஆனி 7 செவ் (21-6-88) ஸப்தமி பி.இ. 2-44வரை, பூரம் மாலை 5-58வரை. சித்தாமிர்தம், சுபதின மன்று. ராகு 2-54—4-28

ஆனி 8 புத (22-6-88) அஷ்டமி பி.இ. 4 57வரை உத்தரம் இரவு 8-53வரை, அமிர்தசித்தம், ஆனி உத்தரம், அசுபதினம். ராகு 11-54—1-28

ஆனி 9 வியா (23-6-88) நவமி முழுவதும், அத்தம் இரவு 11-21 வரை. சித்தம், சுமகருமங்களை விலக்குக. ராகு 1-24—2-58

ஆனி 10 வெ (24-6-88) நவமி—சித்தம் காலை 6-38 வரை, சித்திரை-மரணம் பி.இ. 1-10 வரை, அவ சிய கருமங்கள் செய்யலாம். ராகு 10-25—11-59

ஆனி 11 சனி (25-6-88) தசமி காலை 7-36 வரை, சுவாதி பி.இ. 2-14 வரை, அமிர்தசித்தம். நற்கரு மங்கள் செய்யலாம். ராகு 8-55—10-29

ஆனி 12 ஞாயி (26-6-88) ஏகாதசி காலை 7-46 வ. விசாகம் பி.இ. 2-30 வரை, மரணம், ஸர்வஏகா தசி விரதம், அசுபதினம். ராகு 4 25—5-59

ஆனி 13 திங் (27-6-88) துவாதசி காலை 7-08 வ. திரயோதசி பி.இ. 5-46 வரை, அனுஷம் பி.இ. 2-01 வரை, சித்தம், பிரதோஷ விரதம். அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 7-26—9-00

ஆனி 14 செவ் (28-6-88) சதுர்த்தசி பி.இ. 3-46 வரை, கேட்டை-மரணம் பி.இ. 12-53 வரை, அசுபதினம். ராகு 2-56—4-30

ஆனி 15 புத (29-6-88) பூரணை பி இ. 1-16வரை, மூலம்-மரணம் இரவு 11-14 வரை, பூரணை விர தம், சுபகருமங்களை விலக்குக. ராகு 11-56—1-30

ஆனி 16 வியா (30-6-88) பிரதமை இரவு 10-26வ. பூராடம் இரவு 9-14 வரை, சித்தம், அசுபதினம். ராகு 1-26—3-00

ஆனி 17 வெ (1-7 88) துவிதியை மாலை 7-25வ. உத்தராடம்-சித்தம் மாலை 7-02 வரை, நற்கரு மங்களுக்கு உகந்ததினம். ராகு 10-26—12-00

ஆனி 18 சனி (2-7-88) திரிதியை—மரணம் மாலை 4-22 வரை, திருவோணம் மாலை 4-48 வரை, அசு பதினம். ராகு 8-56—10-30

ஆனி 19 ஞாயி (3-7-88) சதுர்த்தி பகல் 1-24 வ. அவிட்டம்-மரணம் பகல் 2-40 வரை, சுபதின மன்று. ராகு 4-27—6-01

ஆனி 20 திங் (4 7-88) பஞ்சமி பகல் 10-39வரை, சதயம்-சித்தம் பகல் 12-44வரை, நற்கருமங்கள் செய்யலாம். ராகு 7-27—9-01

ஆனி 21 செவ் (5-7-88) ஷஷ்டி காலை 8-10வரை, பூரட்டாதி-மரணம் பகல் 11-06 வரை, அசுப தினம். ராகு 2-57—4-31

ஆனி 22 புத (6 7-88) ஸப்தமி காலை 6-02 வரை, அஷ்டமி பி.இ. 4-17 வரை. உத்தரட்டாதி-சித் தம் காலை 9-48 வரை, அசுபதினம். ராகு 11-58—1-32

ஆனி 23 வியா (7-7-88) நவமி பி.இ. 2-55 வரை, ரேவதி காலை 8-54 வரை. சித்தாமிர்தம், சுபதின மன்று. ராகு 1-28—3 02

ஆனி 24 வெ (8-7-88) தசமி பி.இ. 1-58 வரை, அசுவினி காலை 8-23 வரை, அமிர்தசித்தம், அவ சியகருமங்கள் செய்யலாம். ராகு 10-28—12-02

ஆனி 25 சனி (9-7-88) ஏகாதசி பி.இ. 1-24வரை, பரணி-மரணம் காலை 8-16 வரை, ஸர்வஏகாதசி

விரதம். கார்த்திகை விரதம், அசுபதினம்.
ராகு 8-58—10-32

ஆனி 26 ஞாயி (10-7-88) துவாதசி பி.இ. 1-15 வ. கார்த்திகை காலே 8-33 வரை, சித்தம், காலே 8-33ன்மேல் சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 4-29—6-03

ஆனி 27 திங் (11-7-88) திரயோதசி பி.இ. 1-31வ. ரோகிணி காலே 9-14 வரை, அமிர்தசித்தம், பிரதோஷவிரதம், நற்கருமங்களுக்கு உகந்தது.
ராகு 7-29—9-03

ஆனி 28 செவ் (12-7-88) சதுர்த்தசி பி.இ. 2-14வ. மிருகசீரிடம்-சித்தம் பகல் 10-20 வரை, வயற் செய்கைக்கு நன்று. ராகு 3-00—4-34

ஆனி 29 புத (13-7-88) அமாவாசை பி.இ. 3-23 வரை, திருவாதிரை பகல் 11-52 வரை, சித்தம், அமாவாசைவிரதம், அசுபதினம். ராகு 12-00—1-34

ஆனி 30 வியா (14-7-88) பிரதமை பி.இ. 5-00வ. புனர்பூசம் பகல் 1-51 வரை, அமிர்தசித்தம், சுப கருமங்கட்கு நன்று. ராகு 1-30—3-04

ஆனி 31 வெ (15-7-88) துவிதியை முழுவதும், பூசம் மாலே 4-15 வரை, மரணம், சந்திரதரிசனம் அசுபதினம். ராகு 10-30—12-04

# விருச்சிக லக்ன ஆணும் சிங்க லக்னப் பெண்ணும். சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை - நல்லூர்

சிங்கப் பெண்ணின் தாராள மனப்பான்மையும், வெளி வெளியாக எதையும் பேசும் இயல்பும், வெட்டொன்று துண்டு இரண்டு என்னும் குணமுமுள்ளவர். இதனுல் தன்னைப் பற்றி எதையும் வெளியாகச் சொல்பவள் அல்லள். விமர்சனம் செய்யும் விருச்சிகக் கண்களுக்கு அவள் நெருப்பாக சீறுவாள். அவரோடு உறவாடும் எவரையும் விருச்சிகக் காரர் வெட்டிப் பிளந்து ஆராய்ச்சி செய்வார். ஆனுல் அவர் தனக்குத் தானே மிக இரகசியமாக விருப்பார். இவருடைய குணுதிசயங்கள் அவளுடைய கண்ணோட்டத்திற்குள் வந்தால் அது அவருக்குப் பிடிக்காது. தனக்குகந்த ஒரு சோடியைத் தேடுவதில் விருச்சிககாரர் மிகக் கஷ்டப்படுவார். ஆனுல் அப்படித் தேடிவிட்டால் அவர் தேவைக்கதிகமாக கேட்டுக் கொள்கிருர் என்னும் புகார் கிளம்பும். மும்மரமாக முழுதுமாக நம்பிச்சையுள்ளவளாக அவருக்கு அவள் இருக்க வேண்டும். அவள் தொழில்பாராத பெண்ணுக இருக்கவேண்டும். முன்னேறும் ஆசை இல்லாதிருக்க வேண்டும். ஆனுல் தன்னுடைய செயல்பாடுகளிலே அவள் முற்றும் முழுதுமாக தோய்ந்திருக்க வேண்டும். தனக்குத்தானே ஒரு வாழ்வை சிங்ககாரி அமைத்திடின் அது அவனுடைய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைக்கும். அவனுக்கு அது கசப்பாயிருக்கும். அவளுடைய இயற்கையான பணம் செலவளிக்கும் தன்மை விருச்சிக காரரை வெறுப்புண்டாக்கச் செய்யும். விருச்சிககாரர் சிக்கனப் பேர்வழி. அவர் எப்போ, என்னத்திற்கு செலவு செய்யவேண்டும் என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும். சண்டையிடும் பாதுகாப்பாளரை அவள் புரிந்து கொண்டால் இருவரது வாழ்வும் ஓரளவிற்கு சோபிக்கும்.

பாலியல்பில் சிங்ககாரி கொடுக்கும் தன்மை வாய்ந்தவள். அவனும் அதேபோல் கொடுக்கும் தன்மை இல்லாதிருந்தால் அவள் துன்பப்படுவாள். அவனுக்கு இது மிகவும் கடினமானதாகும். அவனுடைய பால் விருப்பு கூடுதலாகவிருக்கும். ஆகையால் குறைவானதை வேறிடத்தில் நிறைவாக்குவான். இது ஒரு சண்டமாருத உறவாகும்'

**திருத்தம்:**

கடந்த இதழில் இதே பகுதியின் தலையங்கத்தில் துலாலக்னப் பெண்ணும் சிங்கலக்ன ஆணும் எனவிருப்பதை துலாலக்ன ஆணும் சிங்கலக்ன பெண்ணும் எனத்திருத்திக்கொள்க. ஆ-ர்.


## இலவச சோதிட வகுப்புகள்

திருகோணமலையைச் சேர்ந்தவர்களுக்கு ஓர் நற்செய்தி!

பஞ்சாங்க விடயங்களை அறியவும், இலவசமாக சோதிடம் பயிலவும், சோதிட வகுப்புகள் நடத்தவுள்ளோம். இவற்றில் ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

மு. சுந்தரலிங்கதேசிகர் (சோதிடர்)
ஆலடி விநாயகர் தேவஸ்தானம்,
திருகோணமலை.

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)


### விபவ ஹூ ஆனி மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (15-6-88 முதல் 15-7-88 வரை)

| இங் | தமி | வாரம் | மிதுனம் | | கடகம் | சிங்கம் | கன்னி | துலா | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜூன் | ஆனி | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை (காலை) | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) |
| 15 | 1 | புதன் | 6 1 | 8 4 | 10 5 | 12 4 | 2 8 | 4 18 | 6 26 | 8 22 | 10 7 | 11 49 | 1 39 | 3 41 | 5 53 |
| 16 | 2 | வியா | 5 53 | 8 0 | 10 1 | 12 0 | 2 4 | 4 14 | 6 22 | 8 18 | 10 3 | 11 45 | 1 35 | 3 37 | 5 49 |
| 17 | 3 | வெள் | 5 49 | 7 56 | 9 57 | 11 56 | 2 0 | 4 10 | 6 18 | 8 14 | 9 59 | 11 41 | 1 31 | 3 33 | 5 45 |
| 18 | 4 | சனி | 5 45 | 7 52 | 9 53 | 11 52 | 1 56 | 4 6 | 6 14 | 8 10 | 9 55 | 11 37 | 1 27 | 3 29 | 5 41 |
| 19 | 5 | ஞாயி | 5 41 | 7 48 | 9 49 | 11 48 | 1 52 | 4 2 | 6 10 | 8 6 | 9 51 | 11 33 | 1 23 | 3 25 | 5 37 |
| 20 | 6 | திங் | 5 37 | 7 44 | 9 45 | 11 44 | 1 48 | 3 58 | 6 6 | 8 2 | 9 47 | 11 29 | 1 19 | 3 21 | 5 33 |
| 21 | 7 | செவ் | 5 33 | 7 40 | 9 41 | 11 40 | 1 44 | 3 54 | 6 2 | 7 58 | 9 43 | 11 25 | 1 15 | 3 17 | 5 29 |
| 22 | 8 | புதன் | 5 29 | 7 36 | 9 37 | 11 36 | 1 40 | 3 50 | 5 58 | 7 54 | 9 39 | 11 21 | 1 11 | 3 13 | 5 25 |
| 23 | 9 | வியா | 5 25 | 7 32 | 9 33 | 11 32 | 1 36 | 3 46 | 5 54 | 7 50 | 9 35 | 11 17 | 1 7 | 3 9 | 5 21 |
| 24 | 10 | வெள் | 5 21 | 7 29 | 9 30 | 11 29 | 1 33 | 3 43 | 5 51 | 7 47 | 9 32 | 11 14 | 1 4 | 3 6 | 5 18 |
| 25 | 11 | சனி | 5 18 | 7 25 | 9 26 | 11 25 | 1 29 | 3 39 | 5 47 | 7 43 | 9 28 | 11 10 | 1 0 | 3 2 | 5 14 |
| 26 | 12 | ஞாயி | 5 14 | 7 21 | 9 22 | 11 21 | 1 25 | 3 35 | 5 43 | 7 39 | 9 24 | 11 6 | 12 56 | 2 58 | 5 10 |
| 27 | 13 | திங் | 5 10 | 7 17 | 9 18 | 11 17 | 1 21 | 3 31 | 5 39 | 7 35 | 9 20 | 11 2 | 12 52 | 2 54 | 5 6 |
| 28 | 14 | செவ் | 5 6 | 7 13 | 9 14 | 11 13 | 1 17 | 3 27 | 5 35 | 7 31 | 9 16 | 10 58 | 12 48 | 2 50 | 5 2 |
| 29 | 15 | புதன் | 5 2 | 7 9 | 9 10 | 11 9 | 1 13 | 3 23 | 5 31 | 7 27 | 9 12 | 10 54 | 12 44 | 2 46 | 4 58 |
| 30 | 16 | வியா | 4 58 | 7 5 | 9 6 | 11 5 | 1 9 | 3 19 | 5 27 | 7 23 | 9 8 | 10 50 | 12 40 | 2 42 | 4 54 |
| ஜூலை 1 | 17 | வெள் | 4 54 | 7 1 | 9 2 | 11 1 | 1 5 | 3 15 | 5 23 | 7 19 | 9 4 | 10 46 | 12 36 | 2 38 | 4 50 |
| 2 | 18 | சனி | 4 50 | 6 57 | 8 58 | 10 57 | 1 1 | 3 11 | 5 19 | 7 15 | 9 0 | 10 42 | 12 32 | 2 34 | 4 46 |
| 3 | 19 | ஞாயி | 4 46 | 6 54 | 8 55 | 10 54 | 12 58 | 3 8 | 5 16 | 7 12 | 8 57 | 10 39 | 12 29 | 2 31 | 4 43 |
| 4 | 20 | திங் | 4 43 | 6 50 | 8 51 | 10 50 | 12 54 | 3 4 | 5 12 | 7 8 | 8 53 | 10 35 | 12 25 | 2 27 | 4 39 |
| 5 | 21 | செவ் | 4 39 | 6 46 | 8 47 | 10 46 | 12 50 | 3 0 | 5 8 | 7 4 | 8 49 | 10 31 | 12 21 | 2 23 | 4 35 |
| 6 | 22 | புதன் | 4 35 | 6 42 | 8 43 | 10 42 | 12 46 | 2 56 | 5 4 | 7 0 | 8 45 | 10 27 | 12 17 | 2 19 | 4 31 |
| 7 | 23 | வியா | 4 31 | 6 38 | 8 39 | 10 38 | 12 42 | 2 52 | 5 0 | 6 56 | 8 41 | 10 23 | 12 13 | 2 15 | 4 27 |
| 8 | 24 | வெள் | 4 27 | 6 34 | 8 35 | 10 34 | 12 38 | 2 48 | 4 56 | 6 52 | 8 37 | 10 19 | 12 9 | 2 11 | 4 23 |
| 9 | 25 | சனி | 4 23 | 6 30 | 8 31 | 10 30 | 12 34 | 2 44 | 4 52 | 6 48 | 8 33 | 10 15 | 12 5 | 2 7 | 4 19 |
| 10 | 26 | ஞாயி | 4 19 | 6 26 | 8 27 | 10 26 | 12 30 | 2 40 | 4 48 | 6 44 | 8 29 | 10 11 | 12 1 | 2 3 | 4 15 |
| 11 | 27 | திங் | 4 15 | 6 22 | 8 23 | 10 22 | 12 26 | 2 36 | 4 44 | 6 40 | 8 25 | 10 7 | 11 57 | 1 59 | 4 11 |
| 12 | 28 | செவ் | 4 11 | 6 18 | 8 19 | 10 18 | 12 22 | 2 32 | 4 40 | 6 36 | 8 21 | 10 3 | 11 53 | 1 55 | 4 7 |
| 13 | 29 | புதன் | 4 7 | 6 14 | 8 15 | 10 14 | 12 18 | 2 28 | 4 36 | 6 32 | 8 17 | 9 59 | 11 49 | 1 51 | 4 3 |
| 14 | 30 | வியா | 4 3 | 6 10 | 8 11 | 10 10 | 12 14 | 2 24 | 4 32 | 6 28 | 8 13 | 9 55 | 11 45 | 1 47 | 3 59 |
| 15 | 31 | வெள் | 3 59 | 6 6 | 8 7 | 10 6 | 12 10 | 2 20 | 4 28 | 6 24 | 8 9 | 9 51 | 11 41 | 1 43 | 3 55 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஆனி 31 உ (15-7-88) பகல் 10-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8 07—10 06) சிங்க லக்னம்

# ஆனி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

5உ (19-6-88) இரவு 10-16க்கு இட-குரு
17உ (1-7-88) காலை 9-45க்கு மீன-செவ்
22உ (6-7-88) இரவு 11-07க்கு மிது-புத
7உ புதன் உதயம்.
12உ புதன் வக்ரத்தியாகம்
3உ சுக்கிரன் உதயம்.
21உ சுக்கிரன் வக்ரத்தியாகம்.

இம்மாதம் சனி, யுரேனஸ், நெப்டியூன் வக்ரத்தில் சஞ்சரிக்கின்றன.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆனி | 2உ | (16-6-88) | பி.இ. | 12-07 | முதல் | கடகம் |
| | 5உ | (19-6-88) | பகல் | 11-47 | ,, | சிங்கம் |
| | 7உ | (21-6-88) | பி.இ. | 12-43 | ,, | கன்னி |
| | 10உ | (24-6-88) | பகல் | 12-21 | ,, | துலாம் |
| | 12உ | (26-6-88) | இரவு | 8-30 | ,, | விருச்சிகம் |
| | 14உ | (28-6-88) | பி.இ. | 12-53 | ,, | தனுசு |
| | 16உ | (30-6-88) | பி.இ. | 2-41 | ,, | மகரம் |
| | 18உ | (2-7-88) | பி.இ. | 3-42 | ,, | கும்பம் |
| | 20உ | (4-7-88) | பி.இ. | 5-28 | ,, | மீனம் |
| | 23உ | (7-7-88) | காலை | 8-54 | ,, | மேடம் |
| | 25உ | (9-7-88) | பகல் | 2-18 | ,, | இடபம் |
| | 27உ | (11-7-88) | இரவு | 9-44 | ,, | மிதுனம் |
| | 30உ | (14-7-88) | காலை | 7-19 | ,, | கடகம் |

### கிரகநிலை குறிக்க:-

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஆனி மீ 31 உ பகல் 10-00 மணிக்கு சிங்க லக்னம் என அறிந்து கொண்ட பின் 'சிங்கம்' என்ற கட்டிக் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது தனுலக்கினம் உதயமாகிறது. லக்கினாதிபதி 5ல் இருந்து லக்கினத்தை திருஷ்டிப்பது நன்றாகும். பொதுவாக இலக்கினத்தில் சனி இருப்பதால் அரசியல் தீர்வுகள் பின்தள்ளிக்கொண்டே போகும். எனினும் நாட்டு மக்களிடையே அபிவிருத்தி, முன்னேற்றம், விவசாயத் துறையில் ஈடுபாடு என்பன காணப்படும். ஆனி 5ல் ஏற்படும் வியாழமாற்றத்தின் மேல் இடைக்கால அமைதி ஏற்பட இடமுண்டு. செவ்வாய், ராகு சேர்க்கை ஆங்காங்கே கொலை, கொள்ளை நிகழ்வுகளை ஏற்படுத்தும்.

# ஆனி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

15-6-88 — 15-7-88

சூரியன்: 14-6-88 மாலை 7-02
மிதுனராசிப் பிரவேசம்.
15-6-88 உதயம் காலை 5-53
15-6-88 உச்சம் பகல் 12-10
15-6-88 அஸ்தமனம் மாலை 6-27
21-6-88 தக்ஷிணாயன ஆரம்பம்.
(Summer Solstice)
30-6-88 உதயம் காலை 5-56
30-6-88 உச்சம் பகல் 12-13
30-6-88 அஸ்தமனம் மாலை 6·30

சந்திரன்: 15-6-88 சந்திரதரிசனம்
29-6-88 பூரணை பி. இ. 1-16 வரை
13-7-88 அமாவாசை பி. இ. 3-23 வ.

### கிரகங்கள்:

புதன்: மாத ஆரம்பத்தில் வக்கிரகதியில் அஸ்தமனத்தில் இருக்கும் இக்கிரகம் 21-6-88இல் கிழக்கில் உதயமாகி 26-6-88 வக்கிரத்தினின்றும் நீங்கி சுய கதியில் செல்லத் தொடங்கும். மாத முடிவில் சூரிய உதயம் முன் கீழ்வானத்தில் 19 பாகை உயரத்தில் தோற்றும். 6-7-88 இல் சூரியனிலிருந்து கூடியதூரம் 21 பாகை உயரத்தில் காணப்படும். 6-7-88இல் இக்கிரகம் மிதுனராசியிற் பிரவேசிக்கும்.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் வக்கிரகதியில் அஸ்தமனமாயிருக்கும் இக் கிரகம் 17-6-88 இல் கிழக்கில் உதயமாகிறது. 5-7-88இல் வக்கிரகதியினின்றும் நீங்கி நேர்கதியில் செல்லத் தொடங்கும். மாத முடிவில் சூரிய உதயம்முன் கீழ்வானில் 37 பாகை உயரத்தில் தோற்றும். மாதம் முழுவதும் இடபராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் உச்சிக்கு 9 பாகை மேற்கில் தோற்றிய இக்கிரகம் மாதமுடிவில் 22 பாகை சரிந்து காணப்படும். 1-7-88 இல் மீனராசியிற் பிரவேசிக்கும்.

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூரியஉதயம் முன் கீழ்வானில் 31 பாகை உயரத்தில் தோற்றிய இக்கிரகம் மாத முடிவில் 54 பாகை உயரத்தில் காணப்படும். இக்கிரகம் 19-6-88 இல் இக்கிரகம் இடபராசியில் பிரவேசிக்கும்.

சனி: மாதம் முழுவதும் தனு ராசியில் வக்கிர கதியிற் சஞ்சரிக்கும் இக்கிரகம் மாத ஆரம்பத்தில் கிழக்குவானில் 11 பாகை உயரத்தில் தோற்றிய இக்கிரகம் மாத முடிவில் 26 பாகை உயரத்தில் காணப்படும்.

இந்திரன் (யுரேனஸ்): வக்கிரகதியில் தனு ராசியில் சஞ்சரிக்கிறது.

வருணன் (நெப்டியூன்): வக்கிரகதியில் தனு ராசியில் சஞ்சரிக்கின்றது.

குபேரன் (புளூட்டோ): வக்கிரகதியில் தனு ராசியில் சஞ்சரிக்கின்றது.

### சமாகமங்கள்:

19-6-88 இரவு 11-30க்கு சந்திரனுக்கு வடக்கு மக நட்சத்திரம் 1 பாகை.

27-6-88 இரவு 12-30 மணியளவில் சந்திரனுக்கு வடக்கு கேட்டை நட்சத்திரம். சந்திரனால் மறைக்கப்படும்.


29-6-88 முற்பகல் சந்திரனுக்கு வடக்கு சனி 6 பாகை சூரிய உதயம்முன் பார்க்க.

5-7-88 முற்பகல் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 5 பாகை சூரிய உதயம்முன் பார்க்க.

9-7-88 முன்னிரவு சந்திரனுக்கு தெற்கு வியாழன் 6 பாகை. சந்திரோதயத்தின் பின் பார்க்க.

10-7-88 அதிகாலை சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் 10 பாகை.

12-7-88 முற்பகல் சந்திரனுக்குத் தெற்கு 6 பாகை. உதயம் முன் அவதானிக்க.




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.
## 15-6-88 முதல் 15-7-88 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு சூரியன் தாம்ரமூர்த்தியாகி 3-ம் ராசியில் சஞ்சரிக்கின்றார். பொதுவாக நற்பலன்கள் குறைந்தே இருக்கும். தேகாரோக்கியம் பாதிப்புறும். அநாவசியச் செலவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். கொடுக்கல். வாங்கல் விடயங்களில் சிக்கல்கள் இருக்கும். உறவினர்களிடையே கருத்து, வேற்றுமை உருவாகலாம். மனப்பயம் முதலியவற்றால் விபத்துக்களும் உண்டாகலாம். எனினும் 18-6-88-ல் நிகழும் குரு மாற்றம் சிறப்பாக அமைவதால் யாவற்றையும் அது தணிக்க உதவியளிக்கும். அலைச்சல் கூடுதலாக இருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பசுகம் சீராக அமையாது. கணவன் மனைவி உறவில் திருப்தியின்மை தோன்றும். புத்திரர் உதவிகளும் சரிவரக் கிடைக்காது. வருமானத்திலும் செலவுகள் கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். வாடிக்கையாளரின் ஆதரவும், வருகையும் குன்றும். வங்கிநிலவரம் குறைந்தே இருக்கும்.

உத்தியோகத்தர்கட்கு வேலைப்பழு அதிகமாகவே இருக்கும். மேலதிகாரிகளுடன் ஒத்துப்போகும் தன்மை குன்றியிருக்கும். சக உத்தியோகத்தரிடையேயும் கசப்பு மனப்பான்மை வளரும்.

விவசாயிகளுக்கு விவசாயம் நன்கு நடந்தாலும், அதனால் வளரும் ஊதியம் குறைவாகவே இருக்கும். விளைபொருட்களைச் சந்தைப்படுத்த முடியாது போகலாம்.


தொழிலாளர்கட்கு வேலையில்லாப் பிரச்சனை அதிகரிக்கும். ஒப்பந்த வேலைகளும் நட்டத்தையே தரும். சக தொழிலாளரிடையே போட்டி, பொறாமை பூசல்கள் உருவாகலாம்.

மாணவர்கட்கு கல்வியில் நாட்டமிருக்காது. புறக்கருமங்களிலேயே தமது பொழுதைக் கழிப்பர். பரீட்சைகளிலும் உகந்த பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியாது.

பெண்களுக்கு மன நிம்மதி குன்றியிருக்கும். தொழில்பார்க்கும் பெண்கள் சிறிது நன்மையடைவர். கன்னிப்பெண்களின் காதல் விவகாரங்கள் ஏமாற்றத்தையே தரும்.

அதிஷ்ட நாட்கள்:- ஜூன் 17,18,19,20,21,29,30. ஜூலை 14,15.

துரதிஷ்ட நாட்கள்:- ஜூன் 22,23,24மு.ப.27,28. ஜூலை 5,6,7காலை.




கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2

இடபராசியினருக்கு சூரியன் ரஜதமூர்த்தியாகி உ-ம் வீட்டில் சஞ்சாரம் செய்வது நன்மையானதாகும். தேகசுகம், குடும்பசுகம் என்பன திருப்திகரமாக அமையும். தொடுத்த கருமங்களில் காரியசித்தியும், முன்னேற்றமும, வெற்றியும் கிட்டும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் நன்மையான பலன்களே தென்படும். இனபந்துக்களிடையே பரஸ்பரம், சந்தோஷம், கலகலப்பு உண்டாகும். குரு, பெரியோரின் அன்பும், ஆதரவும் கிடைக்கப்பெறும்.

குடும்பஸ்தர்களுக்கு நல்லுறவு மேலிடும். கணவன், மனைவி உறவில் நல்லபிப்பிராயம் அதிகரிக்கும். குடும்ப வருமானம் திருப்திகரமாக அமையும். புத்திர உதவிகளும் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். புதிய முதலீடுகளை ஆரம்பிக்கவும் உகந்த மாதம். பழைய முதலீடுகளும் நன்கு விலைபோகும்.

உத்தியோகத்தர்கட்கு தொழில் உயர்ச்சி உண்டு. சக உத்தியோகத்தரின் உதவி, ஒத்தாசை என்பன நன்கு கிடைக்கும். இடமாற்றங்களும் நன்கு அமையும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி நல்ல விளைவைத் தரும். பண்ணை விவசாயமும் நற்பலனைக் கொடுக்கும். விளைபொருட்கள் நன்கு விலைபோகும்.

தொழிலாளர்கட்கு தொழில் நன்றாக அமையும் வேலை சொல்வோரால் பாராட்டப் படுவீர்கள். ஒப்பந்த வேலைகளால் லாபம் உண்டாகலாம். தொழிலாளரிடையே ஒற்றுமை வலுக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் ஈடுபடும், முன்னேற்றமும் அதிகரிக்கும். கணித, கலைத்துறை மாணவர்கள் கூடிய முன்னேற்றமடைவர். பரீட்சைகளில் சித்தியும், பாராட்டுதல்களும் கிடைக்கலாகும்.

பெண்கட்கு சிறப்பான மாதம். குடும்பப் பெண்கள் கணவன்மாரின் அரவணைப்பில் சந்தோஷமடைவர். வீட்டில் சுபகருமங்கள் இடம் பெறலாம். காதலில் ஈடுபாடுள்ள கன்னிப் பெண்கள் களிபேருவகை அடைவர்.

அதிஷ்டநாட்கள்: ஜூன். 19பி.ப. 20,21,22,23, ஜூலை. 1,2

துரதிஷ்டநாட்கள்: ஜூன். 24பி.ப.25,26பகல். ஜூலை. 7பி.ப.8,9மு.ப.




மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

இவர்களுக்கு சூரியபகவான் சுவர்ணமூர்த்தியாகி ஜன்மராசியில் சஞ்சரிப்பதால் மிகவும் சிறப்பான மாதமாக அமைகிறது. தேகசுகம் குடும்ப சுகம் என்பவற்றில் முன்னேற்றமுண்டு. எண்ணிய கருமங்கள் யாவும் எண்ணியாங்கு நிறைவேறும். குடும்பத்தில் நற்காரியங்களும் நிகழலாம். அந்நியநாட்டுப் பிரயாணத்திற்கான வாய்ப்புக்களும் கிடைக்கலாகும். கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் சீராக அமையும். தொழில் சம்பந்தமான பிரயாணங்களும் ஏற்படலாகும். பெரியோரின் அன்பும், ஆதரவும் கிடைக்கப்பெறும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பத்தில் மனமகிழ்ச்சி நிலவும். குடும்ப வருமானம். சிறப்பாக அமையும். புத்திரர் முதலிய குடும்ப அங்கத்தினரால் உதவி, ஒத்தாசை என்பன கிட்டும். வங்கிநிலை திருப்தியளிக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் 'ஓகோ' என்றிருக்கும். வாடிக்கையாளரின் வருகை அபரிமிதமாக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம்

சிறப்படையும். அந்நியநாட்டுத் தொடர்புடைய வர்த்தகமும் நன்ருக அமையும்.

உத்தியோகத்தர்கட்கு தொழில் சிறப்பாக இருக்கும். மேலதிகாரிகளின் அன்புக்குப் பாத்திரமாவீர்கள். சக உத்தியோகத்தரிடையே சுமுக நிலை தென்படும். வசதியான இடமாற்றங்களும் கிட்டும்.

விவசாயிகட்கு பயிருற்பத்தி பலிதமளிக்கும். விவசாயப்பண்ணைகளில் முன்னேற்றம் கணிசமானதாக அமையும். விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் லாபம் அதிகரிக்கலாகும்.

தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புக்கள் நன்ருக அமையும். தொழிற்பிணக்குகள் யாவும் சமாளிக்கப்பட்டுவிடும். தொழிலுக்கேற்ற ஊதியம் கிடைக்கப்பெறும். வேலைகொள்வோரிடத்திலும் நல்லபிப்பிராயம் மேலோங்கும்.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். சட்டம், கணிதத்துறை மாணவர்கள் கூடிய நன்மை பெறுவர். பரீட்சைகளில் நற்பெறுபேறுகளும் கிட்டும்.

பெண்கட்கு வெகு சிறப்பான மாதம். கணவன்மாரால் நன்கு பாராட்டப்படுவீர்கள். கன்னிப் பெண்கள் தங்கள் எண்ணம் சரிவர நிறைவேறப்பெறுவர். திருமண வாய்ப்புகள் தற்போது இல்லை.

அதிஷ்ட நாட்கள்:- ஜூன் 22,23.24,25,26பகல்,
ஜூலை 3,4.

துரதிஷ்ட நாட்கள்:-ஜூன் 26 இரவு,27,28.
ஜூலை 1,2,9 பி.ப.10,11.




புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இவர்களுக்கு சூரிய பகவான் லோகமூர்த்தியாகி 12-ம ராசியில் சஞ்சரிப்பதால் கஷ்டபலனே கூடுதலாக நிகழும். தேகாரோக்கியம் பாதிக்கப்படும். எம்முயற்சியிலும் அநாவசியச் செலவுகளும், வீண் அலைச்சல்களும் உண்டாகும். அந்நிய நாட்டுப் பிரயாண மோகத்தில் அலைச்சலும், ஏமாற்றமும் அதிகரிக்கும். அதனல் நற்பெறுபேறும் கிடைக்கமாட்டாது. இனபந்துக்களிடையே பகை, விரோதம், பொருமை, போட்டி பூசல்கள் மலிந்து காணப்படும். கொடுக்கல், வாங்கல் விடயங்களும் நிம்மதி தராது.

குடும்பஸ்தர்கட்கு கணவன்-மனைவி உறவில் கருத்து மோதல்கள் ஏற்படலாகும். அநாவசியச் செலவும் உண்டாகும். புத்திரர் முதலிய குடும்ப அங்கத்தினரின் உதவிகளும் கிடைக்கமாட்டாது.

வர்த்தகர்களுக்கு வருமானம் குறைவுபடும். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளைப் பொறுத்து ஆரம்பிப்பது நன்று. வங்கிநிலையும் ஏற்றதாக இல்லை.

உத்தியோகத்தர்கட்கு தொழில் விடயங்களில் சிக்கல்கள் உண்டாகும். மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் உருவாகும். கஷ்டபிரதேச இடமாற்றமும் ஏற்படலாகும்.

விவசாயிகட்கு விவசாயம் நல்ல விளைவைக் கொடுக்காது. விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் நிகரலாபம் கிடைக்காது. அநாவசியச் செலவினங்களும் ஏற்பட்ட வண்ணம் இருக்கும்.


தொழிலாளர்கட்கு வேலைப் பிணக்குகள் உண்டாகும். தினச்சம்பள தொழிலாளர் சீவியம் கஷ்டமாக இருக்கும். ஒப்பந்த வேலைகளும் நன்மையளிப்பதாக இல்லை. வருமானம் குறைவுபடும்.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் குன்றும். விளையாட்டு, போன்ற துறைகளிலேயே நட்டம் கூடுதலாக இருக்கும். பரீட்சைப் பெறுபேறுகளும் நன்மை பயப்பனவாக அமையாது.

பெண்கட்கு மனநிம்மதி குறையும். குடும்பத்தில் பிணக்குகள் வலுக்கும். விவாக முயற்சிகளும் பலிதமளிப்பதாக இல்லை. கன்னிப் பெண்கள் வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்ததாக அமையும்.

அதிஷ்ட நாட்கள்: ஜூன். 24பி.ப.25,26,27,28,
ஜூலை. 5,6,7காலை

துரதிஷ்டநாட்கள்: ஜூன். 29,30
ஜூலை. 3,4,12,13




மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

**சிங்கராசியில் ஜனனமானோருக்கு சூரியன் சுவர்ணமூர்த்தியாகி 11-ம் ராசியில் சஞ்சரிப்பது**

சிறப்பானதாகும், தேகசுகம், குடும்பசுகம் என்பன நன்ருக அமையும். தொழில், வருவாய் என்பன சிறப்புற இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு வளரும். புத்திரர்களாலும், இனபந்துக்களாலும் நன்மை உண்டாகும், அந்நிய சகாயங்களால் பொருள் லாபம் கிடைக்கும். சிறுசிறு பிரயாணங்களும் ஏற்படலாகும். குரு பெரியோர் முதலியோரின் அன்பும், ஆதரவும் கிடைக்கப்பெறும்.

குடும்பஸ்தர்கட்கு நிம்மதியும், மனமகிழ்ச்சியும் கிடைக்கலாகும். பணவருவாய், செல்வாக்கு என்பன சிறக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் இடம்பெறும். கடன்பாக்கிகள் வசூலாகும்.

வியாபாரிகட்கு வியாபாரம் நன்ருக நடக்கும். பழைய முதலீடுகள் நன்கு விலைப்படும். வாடிக்கையாளரின் வருகையும், ஆதரவும் பெருகும். வங்கிநிலைகள் குறைவுபெறமாட்டாது.

உத்தியோகத்தர்களுக்கு தொழில் மேன்மையுண்டு. மேலதிகாரிகளால் பாராட்டுகள் கிட்டும். சக உத்தியோகத்தரிடையே நல்லுறவு வளரும். தொழில் சம்பந்தமான நல்ல இடமாற்றங்களும் ஏற்படலாகும்.

விவசாயிகட்கு விவசாயம் மேன்மை தரும். பயிர்ப்பலிதம் உண்டு. முதலீடுகளுக்கேற்ற லாபம் கிட்டலாகும். பண்ணை விவசாயம் பெரும் சிறப்பைத் தரும். விளைச்சல்களைச் சந்தைப்படுத்துவதில் சிக்கல்கள் இருக்காது.

தொழிலாளர்களுக்கு தொழில் விருத்தியும், லாபமும் கிட்டும். வேலைகொள்வோரால் சில சிரமங்கள் ஏற்படினும் நன்கு சமாளித்துக்கொள்ளத் தக்கதாக இருக்கும். சகதொழிலாளரிடையே நல்லுறவு வளரும்.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமுண்டு. ஆசிரியர் – மாணவர்களிடையே சுமுக மனப்பான்மை மேலோங்கும். பரீட்சைகளில் சித்தி, போட்டிகளில் வெற்றி, பாராட்டுகள் என்பன கிடைக்கப்பெறும்.

பெண்களுக்கு சுக்கிரன் 10ல் சஞ்சரிப்பதால் மகிழ்ச்சியும் உற்சாகமும் உண்டாகும். விவாகப் பேச்சுக்கள் நற்பலனைத்தரும். கலைத்துறையில் ஈடுபட்டுள்ள பெண்கள் கூடியபலனை அடைவர்.

அதிஷ்டநாட்கள்: ஜூன் 27,28,29,30
ஜூலை 7,8,9மு.ப.

துரதிஷ்டநாட்கள்: ஜூன் 17,18,19மு.ப.
ஜூலை 1,2,5,6,14,15



# கன்னி

உத்தரம், 2,3 4, அத்தம், சித்திரை 1,2 கால்

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு சூரியன் தாம்ர மூர்த்தியாகி 10ம் இராசியில் பவனிவருகிருர். மூர்த்திபலம் குன்றியிருப்பினும் ஸ்தானபலம் நன்ருயிருப்பதனுல் நன்மை, தீமை கலந்த பலன்களே நிகழும். குடும்பசுகம், தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படினும் கஷ்டந் தரக்கூடியதாக இல்லை. வருமானத்திலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும். அலைச்சல், பிரயாசை கூடுதலாக இருக்கும். குரு முதலிய பெரியோரின் அன்பும், ஆதரவும் கிடைப்பது குறைவுறும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பத்தில் சுமுகநிலை தென்படும். நிதிநிலைமை பற்ருக்குறையாக இருக்கும். இனபந்துக்களிடையே துக்ககர சம்பவங்கள் நிகழக் கூடும். புத்திரர் உதவி கிடைக்காது.

வர்த்தகர்கட்கு வியாபாரம் சுறுசுறுப்பாக அமைந்தாலும், எதிர்பார்த்த லாபம் கிட்டாது. வாடிக்கையாளரின் வருகை திருப்திகரமாய் இருக்கும். புதிய தொழில்களை பொறுத்தாரம்பிக்கவும்.

உத்தியோகத்தர்கட்கு தொழில்துறையில் செல்வாக்கு அதிகரிக்கும். சக உத்தியோகத்தரின் ஆதரவு பெருகும். வசதியான இடமாற்றம் கிடைக்கப்பெறும். வருமானம் குறைவுபடாது.

தொழிலாளர்கட்கு வேலைப்பழு அதிகமாக இருக்கும். வேலை கொள்வோரிடத்தில் கசப்பு மனப்பான்மை வளரும். ஒப்பந்தத் தொழில் புரிவோர் சிறிது நன்மை அடைவர்.

மாணவர்களுக்கு கல்விவளர்ச்சி நன்மையளிக்காது. பரீட்சையில் தோல்வி, ஆசிரியர்-மாணவர் உறவில் பிணக்கு என்பன உண்டாகும். அந்நிய நாட்டுக் கல்வி சிறிது நன்மைதரும்.

பெண்களுக்கு இம்மாதம் முன்னேற்றமானதாகத் தென்படவில்லை. கணவன்மாருடன் ஒத்துப்போகும் தன்மை குறைவாகவே இருக்கும். விவாக முயற்சிகளில் இழுபறிநிலை உண்டாகும்.

அதிஷ்டநாட்கள்: ஜூன். 29 30
ஜூலை. 1,2,9பி.ப.10,11பகல்

துரதிஷ்டநாட்கள் ஜூன். 19பி.ப.20,21பகல்
ஜூலை. 3,4,7,8,9மு.ப.




சித்திரை, 3,4, சுவாதி, விசாகம், 1,2,3

இவ்விராசியில் ஜனித்தவர்களுக்கு சூரியன் ரஜதமூர்த்தியாகி 9-ம் இராசியில் சஞ்சரிப்பது நன்ருகும். தொழில் வருவாய் என்பன சிறப்பாக அமையும். தேகசுகம் பாதிப்படைய மாட்டாது. குடும்பத்தில் நல்லுறவு நிலவும். புத்திரர்களாலும் இனபந்துக்களாலும் நன்மையுண்டாகும். எண்ணிய கருமங்கள் எண்ணம் போல் நிறைவேறும். முன் தடைப்பட்ட காரியங்கள் எளிதில் அனுகூலமாகும். அந்நியதேச பிரயாண வாய்ப்புக்களும் ஏற்படும்.

குடும்பஸ்தர்கட்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் உண்டாகும். பணவருவாய், செல்வாக்கு என்பன சிறக்கும். வீட்டில் நற்கருமங்கள் நிகழும். புத்திரர், நண்பர்கள் உதவி கிட்டும்.

வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். வாடிக்கையாளரின் வருகை மனதைச் சந்தோஷப்படுத்தும். வங்கிநிலையும் குறைவு படாது. பழைய முதலீடுகள் நன்கு விலைபோகும். புதிய வியாபாரங்களும் ஆரம்பிக்கலாம்.

உத்தியோகத்தர்கட்கு தொழிற்சிறப்புண்டு. வசதியான இடமாற்றம், மேலதிகாரிகளின் பாராட்டு, சக உத்தியோகத்தரிடையே ஒற்றுமை என்பன நன்கமையும். வருமானம் திருப்தி தரும்.

விவசாயிகட்கு விவசாயி சனியின் நற்சஞ்சாரம் முன்னேற்றம் தரும். விவசாய முன்னேற்றத்திற்கு இயற்கையின் ஆதரவும கிடைக்கப் பெறும். முதலீடுகளுக்கேற்ற வருவாயும் கிட்டும்.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தியும், லாபமும் உண்டாகும். புதுத்தொழில் ஆரம்பிப்போருக்கும் உகந்தகாலமாகும். ஒப்பந்தத்தொழில் செய்வோர் நன்மைபெறுவர். கூட்டுறவுத்தொழில் செய்வோர் சிறிது கஷ்டம் அடைவர்.

மாணவர் படிப்பில் நாட்டம் கொள்ளமாட்டார்கள். வெளி ஆரவாரங்களில் ஈடுபாடுகொள்ளுவதால் கல்வித்தேர்ச்சியும் குன்றும். ஆசிரியர் மாணவர்மத்தியில் கருத்துவேறுபாடுகள் வலுக்கும். பரீட்சைமுடிவுகள் ஏமாற்றம் தரும்.

பெண்களுக்கு சுக்கிரன் ஜன்மாதிபதியாகி ஆட்சிபெறுவதனல் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். விவாகப்பேச்சுக்கள் நல்ல முடிவைத்தரும். கன்னிப்பெண்கள் காதல் லீலைகளுக்கு அடிமையாவர்.

அதிஷ்ட நாட்கள்:- ஜூன் 15,16,20,21,25,29
ஜூலை 1,2.3,4,12,13.

துரதிஷ்ட நாட்கள்:- ஜூன் 22,23,24மு.ப.
ஜூலை 5,6,9பி.ப.10,11பகல்




விசாகம் 4, அனுஷம், கேட்டை

இவ்விராசிக்காரருக்கு சூரியன் 8ல்(அட்டமத்தில்) லோகமூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்கிறுர். சூரியன் இருவகைப்பலமுமில்லாதிருப்பது கஷ்டபலன்களையே கொடுக்கும். குரு 7ல் இருந்து திருஷ்டிப்பதால் அதிகம் கஷ்டம் வராது. ஆனல் ஏழரைச் சனீஸ்வரனின் காலமும் நிகழுவது நல்லதல்ல. உடல்நலம் அடிக்கடி குன்றும். குடும்ப சுகமும் குன்றும். பொருள் வருமானமும் குறைவுறும். எந்த முயற்சியிலும் தடைதாமதங்களும் பிரதிகூல சம்பவங்களும் ஏற்படவும் கூடும். வீட்டில் அல்லது குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் பெரும்பாலும் நிகழாது.

குடும்பத்தில் நல்லுறவு குறைவுறும். குடும்ப வருமானம் வீழ்ச்சியுறும். குடும்ப சுகவீனங்கள் முதலியவற்றுல் துன்பச்சூழ்நிலைகள் கவலைகள் ஏற்படவும் கூடும். புத்திரர் உறவினர் பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்க்கு வியாபாரம் மந்தநிலையடையும். நிதிவசதிகளும் வங்கி இருப்புக்களிலும் தட்டுப்பாடு ஏற்படும். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். நிலுவைக்கடன்களை அறவிடமுடியாது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வேலைப்பொறுப்புக்களும் கூடும் வருமானப் பற்ருக்குறைவும் ஏற்படும். உத்தியோகத்தருடன் மனக்கசப்புகள் ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிர் விளைச்சல் வீழ்ச்சியுறும். பயிர் அழிவும் உற்பத்திச்செலவுகளும் கூடும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடையாது. கடன் பயமும் உண்டாகும்.

தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் பெரும்பாலும் கிடையாது. தொழிலாளருக்குள் சச்சரவுகளும் வேலைஇழப்பு - வேலைநிறுத்தம் முதலான போராட்டங்களும் நிகழும்.

மாணவர் கல்விக்குழப்பநிலைக் காரணிகள் வலுவடையும். அதிகாரிகளின் வெறுப்பான ஆர்ப்பாட்டங்கள் முதலான நடவடிக்கைகளில் மாணவரின் ஈடுபாடுகள் கூடுதலால் கல்விமுன்னேற்றம் பாதிப்படையும்.

பெண்களுக்குச் சோதனையான காலம். கன்னிப் பெண்களின் விவாகமுயற்சிகளில் பெரும்பாலும் தோல்விகளே ஏற்படக்கூடும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாருடன் மனத்தாக்கங்கள் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: ஜூன் 17,18,22,23,27,28
ஜூலை 1பக,2,5பக,6,14பக,15
துரதிஷ்டநாட்கள்: ஜூன் 15,16,24பி.ப,25,26ப
ஜூலை 7பக,8,9மு.ப,12,13




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இவர்களுக்குச் சூரியபகவான் இம்மாதம் 7ல் தாம்ரமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்றார். சூரியன் மூர்த்திபலம் குன்றுவதும் சனியின் 7-ம் திருஷ்டி பெறுவதும் கவனிக்கப்படவேண்டும். இவர்களுக்குப் பெரும்பாலும் தேகாரோக்கியம் பாதிப்படையும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். எந்தக் காரியங்களிலும் தடைதாமதங்களோடு ஈடுபடநேரும். வீட்டில் மங்கள கொண்டாட்டங்கள் நிகழச் சாத்தியமில்லை. பந்துசனவிரோதம், அலைச்சல், இராசவிரோதம் முதலியனவும் ஏற்படும். அந்நியதேச சஞ்சாரம் பிதிர்வழிக்கருமாதிகள்கூட நிகழலாம். சனீஸ்வர நவக்கிரக வழிபாடுகளால் எதையும் சமாளித்துக் கொள்ளலாம்.

குடும்பத்தில் பிரச்சனைகள் அவ்வப்போது தோன்றிக்கொண்டிருக்கும். கணவன் மனைவி உறவுகளிலும் விரிசல்கள் ஏற்படும். வீட்டில் துக்க சம்பவங்கள்கூட நிகழக்கூடும். புத்திரர்-பெரியவர்கள் உறவினர்களால் சிக்கல்களும் மலக்கசப்புகளும் ஏற்படும். கடன்பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதம் மந்தநிலையடையும். நிதிநிலைகளிலும் பற்றுக்குறை ஏற்படும். பழைய கடன்நிலுவைகளையும் அறவிடமுடியாது. முதலீடுகளின் வருமானம் வீழ்ச்சியுறும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்கட்குச் சோதனையானகாலம். மேலதிகாரிகளின் வெறுப்புக்குள்ளாகவேண்டியிருக்கும். வேலைப்பொறுப்புக்களால் ஆறுதலே கிடையாது. சிலர் பதவிநீக்கம், கஷ்டப்பிரதேச இடமாற்றம் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்குப் பயிரழிவு கவலைதரும். உற்பத்திச் செலவுகளும் கூடும். மானியம் பசளை முதலியனவும் சமயத்தில் கிடையாது. விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும். விளைவுகளைச் சந்தைப்படுத்துவதிலும் கஷ்டம் உண்டு.

தொழிலாளர்களுக்கு வேலையில்லாப் பிரச்சினை துன்பம்தரும். தொழிலாளர் குழப்பங்களும் ஆர்ப்பாட்டங்களும் அடிக்கடி நிகழும். போககுவரவுச் சாதனங்களில் தொழில்புரிவோர் விபத்துக்கள் அவமிருத்துக்கள் முதலான தாக்கங்களையும் பெறுவர்.

மாணவர் கல்வியூக்கம் பெரிதும் தடைப்படும். பரீட்சைகளில் தோல்வியும் ஏற்படும். ஆசிரியர் மாணவர் உறவிலும் விரிசல்கள் ஏற்படும். சுயமுயற்சி உடையவர்கள் எதனையும் சமாளித்து முன்னேறமுடியும்.

பெண்களுக்கு கடந்தகாலங்களிலும் பார்க்க இம்மாதம் சிறப்பானதாகத் தெரியவில்லை. கன்னிப் பெண்களுக்கு விவாக முயற்சிகளில் ஏமாற்றங்களும் ஏற்படலாம். குடும்பப் பெண்கள் கணவன்மாருடன் கருத்துமாறுபாடுகள் கொள்ளவேண்டியிருக்கும்.

அதிஷ்ட நாட்கள்:- ஜூன் 19பி.இ.20,21,25,26
ஜூலை 3பக.4,7பக.8,9மு.ப.
துரதிஷ்ட நாட்கள்:- ஜூன் 17,18,19மு.ப.27,28.
ஜூலை 9பி.ப.10,11,14,15.




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

மகரராசிக்காரருக்கு இம்மாதம் சூரியன் 6ல் சுவர்ணமூர்த்தியாகச் சஞ்சரிப்பது நன்மையாகும்.

குருவும் 19-6-88ல் இருந்து 5ல் பிரவேசிப்பதும் சிறப்பாகும். மொதுவாக இவர்களின் தேகசுகம் குடும்பசுகம் என்பன சிறப்பாக இருக்கும். பொருள் வருமானமும் கூடும். முயற்சிகளிலும் முன்னேற்றம் ஏற்படும். விற்றல் வாங்கல் சம்பந் தமான லாபங்களும் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷ கொண்டாட்டங்கள் முதலியனவும் நிகழும். இராசாங்க உதவிகள் பெரியோர் உத விகளும் கிடைக்கும். ஆனால் ஏழரைச் சனீஸ்வர னின் காலமும் நிகழுவதால் சிறுசிறு கஷ்டநஷ் டங்களும் இடம்பெறலாம்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். கணவன் மனைவி சுமுகநிலை மனநிறைவு தரும். குடும்பவரு மானம் கூடும். புத்திரர் உதவிகள். இனபந்துக் கள் பெரியவர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் இந்தமாதமும் முன்னேற்றம் காணும். சென்ற காலத்திலும் பார்க்கக் கூடிய லாபம் கிடைக்கும். கறுப்புச் சந்தை வியாபாரிகள் மிகுந்த லாபம் பெறுவர். முதலீடுகளால் வருமானம் சிறக்கும்.

உத்தியோகத்தர்கட்கு மனநிறைவானமாதம். விருப்பம்போல் பதவிகள் இடமாற்றம் முதலியன வும் பெறவாய்ப்புக்கள் கிடைக்கும். சகஊழியர் களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். போதிய வரு மான வசதிகளும் பெறுவர்.

விவசாயிகட்கு பயிரழிவுகள் ஏற்பட்டாலும் விளைச்சலும் கணிசமான அளவில் கூடும். விவசா யப் பண்ணைகளிலும் லாபம் கிடைக்கும். சனி யைக் குரு திருஷ்டிசெய்வதால் கூலியாட்களின் ஒத்துழைப்பும் சந்தைவாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் கிடைக்கும். சீவனத்துக்குப் போதிய வருமானமும் பெறுவர். தொழிலொப்பந்த வேலைகளிலும் நல்ல லாபம் ஏற்படும். எனினும் ஏழரைச்சனியின் காலமாத லால் சிலருக்கு அலைச்சலும் ஏமாற்றமும் ஏற்பட வும் கூடும்.

மாணவர் கல்வியூக்கம் பெறுவர். சட்டத் துறை கணிதத்துறை இரசாயனத்துறை மாண வர்களுக்கு விசேடமுன்னேற்றம் கிட்டும். பரீட் சைகளில் சித்தி, பரிசில்கள், புலமைப் பரிசில்கள் கூடக்கிடைக்கும்.

பெண்களுக்கு மனநிறைவான மாதம். கன் னிப் பெண்களின் காதல் - விவாகமுயற்சிகள் சாத கமாக முன்னேறும். கணவன்மாரின் நம்பிக்கை குடும்பப் பெண்களுக்குக் கிடைப்பதால் குடும்பத் தில் அமைதி ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்; ஜூன் 22,23,26இர,27,28
ஜூலை 1பக,2,5பக,6,10

துரதிஷ்டநாட்கள்; ஜூன் 15,16,20,21,29,30
ஜூலை 11பி,இ,12,13,14கா



## கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்பராசிக்காரருக்குச் சூரியன் 5ல் ராஜஸ மூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்கின்றார். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் தானபலம் குன்றுவதால் நன்மைதீமை கலந்தபலன்களே நிகழும். குருவின் குரூர கோசார சஞ்சாரம் 19-6-88ல் இருந்து நீங் குவதும் நன்மைதரும். இராசி அதிபதி சனி லாபத் தில் இருந்து இராசியைத் திருஷ்டிசெய்வதும் சிறப்பே. ஆனாலும் பொதுவாக இவர்களின் தேகாரோக்கியம் இடைக்கிடை பாதிப்படையும். பொருள்வருமானம் கூடும். எந்தக் காரியங்களிலும் அலைச்சல் மூலம் வெற்றியும் பெறுவர். கடந்த காலத்தின் நடவடிக்கைகளால் பலவகையிலும் இவர்களுக்கு மனஉலைச்சலும் இருக்கும்.

குடும்பத்தில் சுமுகநிலை குறைந்து கொண்டு வரும். கணவன் மனைவியருக்கிடையில் சச்சரவு கள் - பிரிவினைகள்கூட இடம்பெறலாம். உறவினர் புத்திரர் முதலியோரின் உதவிகளும் சிறு ஆறுதல் தந்தாலும் அமைதிக் குறைவையே காணும்.

வர்த்தகர்களுக்கு பார்வைக்கு வியாபாரம் சிறப்பாக அமையினும் லாபம்கிடைக்குமா என்ற கேள்வி ஏற்பட்டுக்கொண்டிருக்கும். கூடியவரை புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகம் தரும சங்கடநிலையை ஏற்படுத்தும். அதிகாரிகளின் சீற் றத்திற்கு அடிக்கடி ஆளாகவேண்டியும் நேரும். கஷ்டப்பிரதேச இடமாற்றங்களும் சிலருக்குக் கிடைக்கும். சகஊழியர் ஒத்துழைப்புத் தருவர்.

விவசாயிகளுக்குச் சனி பலம்பெறுவதில் விளை வுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும். விவ

சாயப் பண்ணைகளில் லாபம் கிடைக்கும். சந்தைப் படுத்துவதில் சிரமங்கள் இல்லை·

தொழிலாளர் வேலைவசதிகள் ஓரளவு பெறுவர். தொழில் ஒப்பந்தவேலைகளில் எதிர்பார்த்த லாபம் கிடையாது. தொழில் ஆர்ப்பாட்டங்களால் சிலருக்குக் கஷ்டங்களும் ஏற்படக்கூடும்.

மாணவர் கல்விவளர்ச்சிக்குத் தடைகளே அதிகம் ஏற்படும். எனினும் சுயமுயற்சியால் கல்வியில் முன்னேற்றம் பெறமுடியும். பரீட்சைகளில் ஓரளவு திருப்தியும் கிட்டும்.

பெண்களுக்கு இந்தமாதம் நன்மையானதாகத் தெரியவில்லை. கன்னிப்பெண்கள் தங்கள் காதல் விவகாரங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; குடும்பச்சச்சரவுகள் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: ஜூன் 15,16,24பி.ப,25,29,30
ஜூலை 3ப,4,7பக,8,12,13

துரதிஷ்டநாட்கள்: ஜூன் 17,18,19மு.ப,22,23
ஜூலை 1பக,2,14பக,15



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

இந்த ராசிக்காரருக்கு சூரியன் 4ல் லோக மூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கின்றார். சூரியன் தானபலம் - மூர்த்திபலம் இரண்டும் குறைவது நன்மைதராது. குருவும் 19-6 88 முதல் குரூர கோசாரசஞ்சாரம் செய்வதும் மற்றும் முக்கிய கிரகங்களான சனி - செவ்வாய் இவர்களின் கோசாரசஞ்சாரமும் பாதகமாக இருப்பதும் நன்மையல்ல. தசாபுக்திகள் அந்தரபலம் பெற்றவர்கள் தவிர மற்றவர்களுக்கு கடினமான சோதனை காலமாக இம்மாதம் அமையும். தேகசுகம் குடும்ப சுகம் என்பன பாதிப்படையும். வருமானத்திலும் அநாவசியச் செலவுகளும் கூடும். குடும்பத்தில் துக்கசம்பவங்கள் கூட இடம்பெறலாம்.

குடும்பத்தில் அமைதி குன்றும். கணவன் மனைவி பிணக்குகள் - பிரிவுகள் கூட ஏற்படக்கூடும். இனபந்துக்களின் பகைவிரோதங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். முதலீடுகளில் நட்டம் கூட ஏற்படும்; பழைய நிலுவைக்கடன்களை அறவிடமுடியாது. புதிய முதலீடுகளை தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகளால் கஷ்டங்கள் ஏற்படும். வேலைப்பளுவும் கூடும். வருமானமும் பற்றாக்குறைவிலேயே இருக்கும். வேதனையால் சிலர் வேலையை விடக்கூடும்.

விவசாயிகளுக்குச் சனியைக் குரு திருஷ்டி செய்தலின் பயிர்ச்சேதம் ஏற்படினும் நல்ல விளைவும் உண்டு. எனினும் உற்பத்திச் செலவால் எதிர்பார்த்த லாபம் கிடையாது.

தொழிலாளர்கட்கு வேலைவசதிகள் குறையும், நாளாந்த வருமானமும் குறையும். தொழிலாளர் பிணக்குகளால் சீவன கஷ்டங்களும் ஏற்படும். தொழில்களில் லாபம் கிடைப்பது அரிது.

மாணவர் கல்விவளர்ச்சி பெரிதும் பாதிப்படையும். மனஉளைச்சலால் சிலர் அறைகுறையே கல்வியைத் தொடராது நிறுத்தியும் விடலாம். பரீட்சையிலும் பலிதம் குறைவாகவே இருக்கும்.

பெண்களுக்கு வாழ்க்கையில் பலதில்லுமுல்லுகளைச் சந்திக்கவேண்டிய காலம். கன்னிப் பெண்களின் காதல் விவகாரங்களில் எச்சரிக்கை தேவை.

அதிஷ்டநாட்கள்: ஜூன். 17,18,19மு.ப.26இ.ர.
ஜூலை. 1பக.2,5பக.6,10,14,

துரதிஷ்டநாட்கள்: ஜூன். 19பி.ப.20,21,25,26ப.
ஜூலை. 3பக. 4,5அ.கா.

---

## இலங்கை சோதிட ஆய்வுமன்றம்

ஷெ மன்றத்தின் 1988-ம் ஆண்டு வைகாசி மாதக் கூட்டம் 29-5-88ல் நல்லை திருஞானசம் பந்தர் ஆதீனத்தில் மு.ப. 10 மணியளவில் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஆரம்பமானது. சென்றகூட்ட அறிக்கையும் பொருளாளர் அறிக்கையும் வாசிக்கப்பட்டு சரியென ஏற்றுத் தலைவரால் கைச்சாத்திடப்பட்டது.

திரு. வே. சின்னத்துரையால் ''அகாலமரணமும் பிதிர்களும்'' என்னும் பொருள்பற்றிப் பேசப்பட்டது. சாதகரீதியில் அகாலமரணமாகிய வர்களின் சாதகங்கள் எவ்வாறு அமைந்தன என்பதைப் பல்வேறு உதாரணச் சாதகங்கள் மூலம் அவர் விளக்கினார். அகாலமரணமாகியவர்களின் பிதிர்கள் தத்தம் பாசங்கள் உள்ளவர்களின் உள்ளத்தில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பன வற்றையும் விளக்கினார்.

பின்னர் சபையோரின் கலந்துரையாடல் நடைபெற்றது. அடுத்த கூட்டத்தில் திரு. ஐயா சச்சிதானந்தம் பேசுவதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

---

# விதியை மதியால் வெல்லலாம்!

சுடர்விட்டு எரியும் நெருப்பில் ஒரு சிறுபகுதி தனித்து விழும்போது அதன் ஒளி மங்கி கறுப்பு நிறமான கரியாகிறது. துண்டுபட்ட இந்த கரிக்கும் நெருப்பின் ஆற்றல் உண்டு. இதை மீண்டும் நெருப்புடன் சேர்க்கும்போது சுடர் மிக்க நெருப்பின் ஆற்றலைப் பெற்றுவிடுகிறது. இக்கரிக்குள் நெருப்பின் சக்தி முழுவதும் அடங்கி இருக்கிறது.

இதே போன்றுதான் செங்கதிரோனின் செல்வக் குமாரனுகிய 'சனி' கரியவனுகவும் மந்தனுகவும் விளங்குகிறுர். இருப்பினும் ஆற்றல் படும்போது கரி புகையாகக் கிளம்பி நெருப்பாகி ஆற்றல் படுகிறுர். திரும்பவும் மந்தப்படும்போது மந்தனுகி முடமாகிவிடுகிறுர்.

எனவே நாம் எக்காரியத்திலும் அவசரப்பட்டு ஆத்திரமடைந்து, உணர்ச்சிவசப்பட்டு சூட்டுடன் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி, சிந்தனையாகிய மதிக்கு இடங்கொடாது, வெய்யவனின் ஆற்றலைக்கொண்டு செய்யும் செயல்களுக்கு பானுபுத்ரனுகிய 'சனி' உதவிக்கு வருவதுபோல் வந்து இடம்பெற்றுவிடுகிறுர். பிறகு நாம் செயல்படத் துவங்கிய அக்காரியம் சனிபகவானின் பூரண ஆதரவுடன் அறிவு மங்கி ஆற்றல் குறைந்து ஊழ் வழி சென்றுவிடுகிறது. இதனுல் தான் ஊழாகிய விதியை வெல்லமுடிவதில்லை.

கா. சின்னையா, சங்குவாரி, கம்பளை.

இளஞ்சிவப்பும் அக்கினிச் சுவாலையுமுடைய சூரியபகவானிடமிருந்து கிடைக்கும் அறிவுச்சுடரைச் சந்திரன் தன்வயப்படுத்தி, ஆற்றலைக் குறைத்து, தூய்மையாக்கி வெண்மதியெனத் திகழ்ந்து தெய்வீகமான சாத்வீகத் தன்மைபெற்று தனது தூயகதிரை உலகிற்கு அளிக்கும்போது அக்கதிர் இயக்கம் பசுமையாகத் தெரிவதுடன் அப்பசுமை பச்சை நிறத்தவனும் அறிஞனுமாகிய 'புதனின்' அம்சம்பெற்றுவிடுகிறது. அதனுற்றுன் பண்டிதனுகிய புதனை மதிமகன் எனக் கூறுகிறது போலும் சோதிட நூல்.

எனவே மதிமகனின் துணையைப் பெறவேண்டுமாயின் மதிநுட்பத்தைக் கையாளவேண்டும்:

அதர்மங்கள் ஆட்கிசெய்யும் இடமெல்லாம் தர்மம் தலைகுனிந்து கலங்குவதை தெய்வம் கண்காணிக்கத்தான் செய்கின்றது. எனவே துன்பங்களிலிருந்தும் இடையூறுகளிலிருந்தும் கஷ்டநஷ்டங்களிலிருந்தும் விடுபட இறைவனை நினைத்து உருகுதல் வேண்டும்.

கேவலம் காமயின்பம், கலகம், துவேஷம், அவநம்பிக்கை மனதில் உதிக்காமல் பார்த்துக் கொள்வோம். பிறருடைய துவேஷம், குற்றம், அவமரியாதை ஆகியவைகளால் நம் மனதைக் கலங்கவிடக்கூடாது. சுகம், துக்கம், நன்மை, தீமை எது நேரிடினும் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம்.

நமக்குத் தெய்வீகமான ஆத்மசக்தியுண்டு. வீர்யம், தைரியம், மரியாதை, பரோபகாரம், ஆத்மசிந்தனை உடையவர்களாய் வாழ்வோமாக. நம் செயலுக்கு மீறியது விதி — அதை ஒருவர் தடுக்கவாவது மாற்றவாவது முடியாது. உலகத்தில் மனிதருக்கு நன்மை எது? நீதி, சத்தியம் தெளிவான பரிசுத்த புத்தி, தைரியம், பரோபகாரம், ஜீவகாருண்யம், சுகம்தரும் தெய்வம் நம்மிடம் அன்புகொள்ளுமாறு வாழ்வோமாக. எது நேர்ந்தாலும் இது ஆண்டவன் செயல் என்று நாம் சிந்திப்பது சாலவும் நன்று. நடந்துபோனதைப்பற்றிய கவலையை விட்டால் தான் பரம சுகத்திற்கு வழி.

மதிநுட்பத்தைப்பெற முதலில் சினத்தையும் ஆத்திரத்தையும் அவசரபுத்தியையும் இனத்துவேஷத்தையும் அகற்றிவிடவேண்டும். தெய்வீகசக்தியைத் துணைகொண்டு நாம் எக்காரியத்திலும் பொறுமையுடன் சிந்தித்து தர்மநெறி தவருது செயல்படத் துவங்கினுல் ஆரம்பத்தில் சிறு இன்னல்கள் ஏற்படினும் முடிவு நன்மையாகவும் நலமாகவும் ஏற்றமுடையதாகவும் இருக்கும்.

சாந்தனும் அருகனுமாகிய 'புதனில்' பிறந்த மும்மூர்த்திகளின் பிரணவ அக்ஷரங்களைக்கொண்ட 'விபவ' புத்தாண்டு முதல் மதிமகனின் துணை பெற்று நமக்கும் நாட்டிற்கும் ஏற்பட்டுள்ள விதியை மதியால் உணர்ந்து, உணர்ச்சிவசப்படாமல் பொறுமையைக் கடைப்பிடித்து, தெய்வீக

(23-ம் பக்கம் பார்க்க)

# வியாழ மாற்றம் நன்மை தருமா?

கிரகங்களுக்குள் மிகப்பெரியதும், இராசி மண்டலத்தில் தனு, மீன இராசிகளுக்கு அதிபதியாகவும், தனம், புத்திரப்பேறு ஆகியவற்றிற்குக் காரகனுகவும் விளங்குகின்ற தேவகுருவாகிய வியாழபகவான் விபவ ஞூ ஆனி மீ 5-ம் திகதி (19-6-88) ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணி 16 நிமிடமளவில் மேடராசியினின்றும் நீங்கி, அசுர குருவின் சொந்த வீடாகிய இடபராசிக்குப் பிரவேசிக்கின்ருர். ஒருவருடகாலம் இடபத்தில் இருப்பார்.

வியாழபகவான் எல்லாக் கிரகங்களிலும் பார்க்க சுபபலன்களை வழங்குபவர். இவர், தான் இருக்கும் வீடுகளிலிருந்து 5-ம், 7-ம், 9-ம் இராசிகளைக் கருணைகொண்டு பார்ப்பார். தானிருக்கும் இடத்திலும் பார்க்க, திருஷ்டிபெற்ற இடத்துக்கே கூடிய நற்பலனை வழங்குவார். ''குரு பார்த்தால் கோடிதோஷம் நீங்கும்'' என்பது முதுமொழி; 5-ம், 9-ம் பார்வைகளே பூரண சுபதிருஷ்டியாகும். இவர் சாந்த சொரூபமானவர். இவரது வழிபாட்டுக்கு உகந்த தானியம் — கடலை, இரத்தினம் — புஷ்பராகம், மலர் — முல்லை. சமித்து — அரசு, சுவை — இனிப்பு. இந்திராதி தேவர்கட்கெல்லாம் குருவாக விளங்குபவர். சட்டம், சமயம், பெருமை, அதிகாரம், வெற்றி, முதன்மை கீர்த்தி, செல்வம் மகிழ்ச்சி, மங்களம், செழிப்பு, வளர்ச்சி ஆகியநற்பலன்களை நமக்கு வழங்குபவர்.

இலங்கையின் லக்கினமான கும்பத்துக்கு 4-ம் வீட்டில் வியாழன் சஞ்சரிப்பதால் பொதுவாக நற்பலன்கள் ஏற்பட இடமுண்டு. பொளாதாரத்தில் அபிவிருத்தி உண்டாகும். கட்டிடங்கள், வீடமைப்புத் திட்டங்கள் என்பன விருத்தி பெறும். குருபெயர்ச்சி நேரத்தில் சந்திரன் கேதுவின் நட்சத்திரமாகிய மகத்திற் சஞ்சரிப்பதால் குருவினுல் ஏற்படக்கூடிய நற்பலன்கள் பல சமுதாய, அரசாங்க, அதிகார வர்க்கங்களால் சின்னுபின்னப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் இடம்பெறலாம். நெற்பயிர், மஞ்சள்நிறத் தானியங்கள், கடலை முதலியுவை அதிக விளைச்சலைக் கொடுக்கும். கல்வித்துறையில் முன்னேற்றமான பலன்கள் தென்படும். வெளிநாட்டுத் தொடர்புகள்

([illegible])

அதிகரிப்பதுடன், உதவிகளும் கிடைக்கப்பெறும். கும்பத்தில் ராகு சஞ்சரிப்பதால் குருவின் நற்பலன்களைக் குறைத்து, வன்முறைகளுக்குத் தூபமிட்டுக்கொண்டிருக்கும்.

தமிழர்களின் இலக்கினமாகிய மேடத்துச்கு 2-ம் வீட்டில் வியாழன் சஞ்சரிப்பதும், 8-ம் வீடாகிய விருச்சிகத்தை நோக்குவதும் தமிழர்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை நல்கும் எனக்கூறலாம். தற்போதைய கெடுபிடிகள் படிப்படியாகக் குறையும். தொழில் விருத்தி கல்விவிருத்தி என்பன காலப்போக்கில் முன்னேற்றமடையும். மனநிம்மதியும், அமைதியும் ஏற்பட இடமுண்டு.

வியாழனது மாற்றத்தால் ஒருவருட காலத்துக்குத் தனிப்பட்டவர்களுக்கு ஏற்படும் பலாபலன்களை ஆராய்வோம்.

## மேடம்

இவ்விராசியினருக்கு குருபகவான் இரஜத மூர்த்தியாகி 2-ம் இராசியில் பவனிவருவது சிறப்பான பலன்களைக் கொடுக்கக்கூடியதாக உள்ளது; சகல கருமங்களும் எண்ணம்போல் நிறைவேறும், தேகசுகம், குடும்பசுகம் நன்மைதரும், உத்தியோகத்துறையினருக்கு வசதியான இடமாற்றமும் தொழில் மேன்மையுமுண்டு. வியாபாரத்துறையினருக்கு வியாபாரம் 'ஓகோ' என நடைபெறும். பிறநாட்டுத் தொடர்புடைய வர்த்தகம் மேலும் சிறப்படையும். விவாகமாகாதோருக்கு விவாகப் பலன் கைகூட இடமுண்டு. மாணவர்கட்கு கல்வித்துறையில் ஆர்வமும், முன்னேற்றமும் உண்டாகும்.

## இடபம்

இவர்களுக்கு லோகமூர்த்தியாகி ஜன்மராசியில் வியாழன் சஞ்சரிப்பார். 'ஜன்மராசிக்குரு இராமர் வனவாசம்' என்ருேர் முதுமொழியும் உண்டு. இவ்விராசியினருக்கு பொதுவாகக் கஷ்டபலன்களே நிகழும், இத்துடன் அட்டமத்துச்சனியும் நடப்பதால் பலதுர்ப்பலன்களை எதிர்கொள்ள நேரிடும். குடும்பத்தில் நிம்மதி இருக்காது. தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படும். உத்தியோகத்துறையினருக்கு அலைச்சலும், பிரயாசை

யும் அதிகமாகும். வியாபாரத்துறையினருக்கு முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். கடன்பழு ஏறும். விவாகமாகாதோர்க்கு விவாகப்பலன் தாமதப்படும். மாணவர்கட்கு கல்வியில் நாட்டமிருக்காது. இவ்விராசியினர் வியாழக்கிழமை விரதமிருந்து தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வரவும்.

### மிதுனம்

மிதுனராசியிற் பிறந்தோருக்கு வியாழபகவான் தாம்ரமூர்த்தியாக 12-ம் ராசியில் சஞ்சரிக்கின்றார். மூர்த்திபலம், ஸ்தானபலம் இரண்டும் குன்றியிருப்பதனால் நற்பலன்கள் நிகழ இடமில்லை. குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது. தேகசுகம் இடையிடையே பாதிப்படையக்கூடும். உத்தியோகத்தர்கட்கு தொழில்துறையில் அலைச்சல், பிரயாசை, செலவீனங்கள் அதிகமாகும். மேலதிகாரிகளுடன் ஒத்துப்போகும் தன்மை இருக்காது. வியாபாரிகட்கு வியாபாரம் பலிதமளிக்காது. புதிய முதலீடுகளைப் பொறுத்து ஆரம்பிப்பது நன்று. விவாகமாகாதோருக்கு விவாகப்பலன் கிடைப்பது கஷ்டமாக இருக்கும். 7ல் சனியும் சஞ்சரிப்பதால் கணவன் - மனைவி உறவில் விரிசல் உண்டாகும். மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றம் கிட்டாது. பரீட்சைப் பெறுபேறுகளும் திருப்திகரமாக இருக்காது.

### கடகம்

இவர்களுக்கு வியாழபகவான் ரஜதமூர்த்தியாக 11-ம் இராசியில் சஞ்சரிப்பது சிறப்பானதாகும்: குடும்பத்தில் குதூகலம் மேலிடும். தேகசுகம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தர்கட்கு இதுவரைகாலமும் ஏற்பட்ட கஷ்டபலன்கள் குறைந்து நிம்மதி நிலவும். வசதியான இடமாற்றங்களும், மேலதிகாரிகளின் பாராட்டுதல்களும் கிடைக்கலாகும். வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்பாக இருக்கும். புதிய முதலீடுகளையும் ஆரம்பிக்கலாம். வங்கிநிலை திருப்திகரமாக அமையும். கொடுக்கல் வாங்கல் விடயங்கள் நன்மைதரும். விவாகமாகாதோருக்கு விவாகமுயற்சிகள் பலிதமளிக்கும்: மாணவர்கட்கு கல்வியில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். போட்டிகளில்வெற்றி, பரீட்சைகளில் சித்தி என்பன கிட்டும்.

### சிங்கம்

சிங்கராசியினருக்கு வியாழன் சுவர்ணமூர்த்தியாக 10-ம் இராசியில் சஞ்சரிப்பார். மூர்த்திபலம் சிறப்பாக இருப்பதனால் ஸ்தானபலம் குன்றினும் தீயபலன்களை அனுபவிக்க இடமிருக்காது. ''10ல் குரு பதியைவிட்டுக் கிளப்பும்" என்றோர் வாக்கும் உண்டு. இவர்கட்கு குடும்பத்தில் சந்தோஷம் இருக்கும். தேகசுகம் பாதிப்படையமாட்டாது உத்தியோகத்தர்கட்குத் திடீர் இடமாற்றங்கள் ஏற்படினும் வேலைப்பழு அதிகரிக்காது. மேலதிகாரிகளின் அன்புக்குப் பாத்திரமாவீர்கள். வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். இது சம்பந்தமாக அடிக்கடி திடீர் பிரயாணங்கள் ஏற்படலாகும். விவாகமாகாதோருக்கு விவாகவாழ்க்கை நற்பலனைக்கொடுக்கும். பெண்களுக்கு விவாக நிகழ்ச்சியுடன் இருப்பிடமாற்றமும் ஏற்படலாகும். மாணவர்கட்கு கல்வித்துறை நன்றாக அமையும்.

### கன்னி

இந்த இராசியில் பிறந்தவர்கட்கு வியாழபகவான் லோகமூர்த்தியாகி ஜன்மராசியைத் திருஷ்டிக்கின்றார். ஸ்தானபலம் நன்றாக இருப்பினும் மூர்த்திபலம் குன்றியிருப்பதனால் நன்மை, தீமை கலந்த பலன்களே நிகழும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக்குறைவிருக்காது. தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படினும் கஷ்டந்தரக்கூடியதாக இல்லை. உத்தியோகத்தர்கட்கு முன்பிருந்த கஷ்டபலன்கள் விடுபட்டு குதூகலம் மேலிடும். இருப்பினும் வேலைப்பழு கூடிக்கொண்டே இருக்கும். வியாபாரிகட்கு வியாபாரம் 'ஓகோ' என்று நடக்கும். அந்நிய நாட்டுடன் தொடர்புள்ள வியாபாரம் பலிதமளிக்காது. விவாகமாகாதோருக்கு மணவினை எண்ணம்போல் நிறைவேறும். மாணவர்கட்குக் கல்வியில் ஊக்கம் குன்றும். முயற்சி வேண்டும்.

### துலாம்

துலாராசியினருக்கு வியாழன் அட்டமத்தில் சுவர்ணமூர்த்தியாகச் சஞ்சரிக்கின்றார். பொதுவாக இவ்விராசியினர் நற்பலன்களைப் பெறமாட்டார்கள். எடுத்த கருமங்கள் தோல்வியிலேயே முடிவுறும். குடும்பத்தில் கருத்துவேறுபாடுகள் நிலவும். தேகசுகம் அடிக்கடி பாதிப்படையும். உத்தியோகத்தர்கட்கு அலைச்சலும் பிரயாசையும் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் வெறுப்புக்காளாக நேரிடலாம். சகஉத்தியோகத்தர்களுடன் சச்சரவு வலுக்கும். வியாபாரிகள் வியாபாரத்தில் ஏமாற்றமடைவர். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய வியாபாரங்களைப் பொறுத்திருந்து ஆரம்பிக்கவும். விவாகமாகாதவர்களுக்கு விவாக முயற்சிகள் விழலுக்கிறைத்த நீர்போலாகிவிடும். மாணவர்கட்கு கல்வியில் நாட்டமிருக்காது. இவ்

விராசியினர் வியாழக்கிழமை விரதமனுஷ்டித்து வியாழனை மஞ்சள் புஷ்பத்தால் அர்ச்சிக்கவும்.

### விருச்சிகம்

இவர்களுக்கு குருபகவான் தாம்ரமூர்த்தியாக 7-ம் இராசியில் சஞ்சாரம் செய்கின்றார். நற்பலன் களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. குடும்பத் தில் பிணக்குகள் வலுக்கும். கணவன் - மனைவி உறவில் விரிசல் தென்படும். கொடுக்கல் வாங்கல் விடயங்களும் நன்மையளிப்பனவாக இல்லை. உத் தியோகத்தர்கட்கு தொழிலில் நாட்டமிருக்காது. வருமானம் திருப்திகரமாக அமையினும் மனச்சஞ் சலம் ஏற்படலாகும். வியாபாரிகட்கு வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். முயற்சிக்கேற்ற பலன் கிடைப்பது கஷ்டம். வங்கிநிலை திருப்தியளிக்கும். விவாகமாகாதோருக்கு விவாகமுயற்சிகள் பலத்த அலைச்சலின் பின்பே கைகூடலாகும். மாணவர் கட்கு கல்வித்துறையில் எதிர்பார்த்த பலன்கிடை யாது.

### தனுசு

இவ்விராசியினருக்கு குருபகவான் இரஜத மூர்த்தியாக 6ம்இராசியில் பவனிவருகிறார். இவர் கட்குத் தீயபலன்களே கூடுதலாக நடக்கும். குடும் பத்தில் மனமகிழ்ச்சி இருக்காது. செலவீனங்களும் அதிகரித்த வண்ணம் இருக்கும். உறவினர்களின் ஆதரவும் கிடைக்காது. உத்தியோகத்தர்கட்கு தொழில் வளம் பெறாது. வேலைப்பழு அதிகமா கும். அதிகாரிகளுடனும் வாக்குவாதங்கள் உண் டாகும். வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்புறாது. பழைய முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். விவாக மாகாதவர்கட்கு விவாகப்பலன் பலிதமளிக்காது. விடாமுயற்சி வேண்டும். மாணவர்களுக்குப் படிப் பில் அக்கறை இருக்காது. உயர்கல்வி மாணவர் களுக்கு அந்நியநாட்டுக் கல்விவாய்ப்பு உண்டா கும். இவ்விராசியினர் வியாழக்கிழமை விரதம் இருந்து தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வரவும்.

### மகரம்

மகரராசியில் ஜனித்தோருக்கு குருபகவான் லோகமூர்த்தியாகி 5-ம் இராசியில் சஞ்சரித்துக் கொண்டு, ஜன்மராசியைத் திருஷ்டிக்கின்றார். மூர்த்திபலம் குன்றியிருப்பினும், ஸ்தானபலம் நன்றாக இருப்பதனால் நன்மை, தீமை கலந்த பலன்களே நிகழவேண்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படி னும் நிலைமை கட்டுக்குள் இருக்கும். உத்தியோ கத்தர்கட்கு வேலைப்பழு அதிகரிக்கும். மேலதி காரிகளால் அவப்பெயர் கேட்கவும் நேரிடலாம். இருப்பினும் வருமானம் நன்றாக அமையும். வியா பாரிகட்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். புதிய தொழில்களும் நன்மையளிப்பதாக இருக் கும். விவாகமாகாதவர்கட்கு மணவினை கைகூட இடமுண்டு. மாணவர்கள் கல்வியில் கூடியமுயற்சி எடுத்தால் முன்னேற்றம் ஏற்படலாம்.

### கும்பம்

இவர்களுக்கு வியாழபகவான் தாம்ரமூர்த்தி யாகி 4-ம் இராசியில் சஞ்சரிப்பதால் சிறப்பான பலன்களை எதிர்பார்க்க முடியாது. குடும்பத்தில் குதூகலம் இருக்காது. தேகசுகம் திருப்திகரமாக அமையும். உத்தியோகத்தர்கட்கு தொழில்மேன் மையுண்டு. எனினும் அலைச்சலும், பிரயாசையும் அதிகமாகும். சகஉத்தியோகத்தரிடையே கசப்பு மனப்பான்மை வளரக்கூடும். வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்புற நடக்கும். கறுப்புமார்க்கட் வியாபாரம் நன்மைதரும். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். விவாகமாகாதவர்கட்கு விவாக முயற்சிகள் சாதகமான பலனைக் கொடுக்காது. மாணவர்கட்கு கல்வியில் ஈடுபாடான பலன்கள் குன்றும்.

### மீனம்

மீனராசியினருக்கு வியாழன் சுவர்ணமூர்த்தி யாகி 3-ம் இராசியில் பவனிவருகின்றார், 3-ல் குரு 'துரியோதனன் படை மாண்டது' என்னும் ஓர் முதுமொழியும் உண்டு. ஸ்தானபலம் நன்றாக இல்லாவிடினும் மூர்த்திபலம் சிறப்பாக இருப்ப தால் தீயபலன்களை நிகழவிடாது கட்டுப்படுத் தும். குடும்பத்தில் மனமகிழ்ச்சி நிலவும். தேக சுகம் பாதிப்படையாது. உத்தியோகத்தர்கட்கு தொழில்துறையில் பிரயாசைக்கேற்ற நற்பலன் உண்டு. மேலதிகாரிகளின் பாராட்டுதல்களும், உதவிகளும் கிட்டும். வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்புற நடக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. விவா கமாகாதோர்க்கு விவாகமுயற்சிகள் தொடர்ந்த வண்ணம் இருக்கும். மாணவர்கட்கு கூடிய ஊக் கம் அவசியம்.

---

முக்கிய குறிப்பு:

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப் பாளியல்லர்.

ஆ-ர்

---

# 4-6-88 இல் சனி மாற்றம் நிகழமாட்டாதா?

க. கிருபாகரன் மந்துவில்.

சந்:- இவ்வருடம் வாக்கிய பஞ்சாங்கப்படி சனி பகவான் வக்கிரகதியில் 4-6-1988ல் விருச்சிகராசிக்கு மாற்றமடைகின்றார். ஆனல் திருக்கணித பஞ்சாங்கத்தில் இம்மாற்றம் பற்றிக் குறிப்பிடப் படவில்லையே?

நிவி:- திருக்கணித பஞ்சாங்கத்திற்கும் வாக்கிய பஞ்சாங்கத்திற்கும் அடிப்படை கணிதமுறையே வித்தியாசம். மேலும் முன்பு வாக்கிய பஞ்சாங்கம் மட்டும் இருந்தபோது அதன் கணிதமுறை பிரத்தியட்சத்திற்கு ஒத்துவராமையினலேயே திருக்கணிதமுறை உருவானது. திருக்கணித பஞ்சாங்கம் வெளிவரவேண்டியதற்கு மூலகாரணம் வாக்கிய பஞ்சாங்கத்தின் பிழையான கணித முறையே.

## சந்தேக நிவிர்த்தி

மேலும் திருக்கணித பஞ்சாங்கத்தின் கணித முறை பிறநாடுகளிலுள்ள பஞ்சாங்கங்களுடன் ஒத்துவருகின்றது. இவ்வருடம் வெளியாகிய லண்டனிலிருந்து வெளிவரும் 'றபேல்ஸ் எபமெரிஸ்' ஜேர்மனியிலிருந்து வெளிவரும் 'ஜேர்மன் எபமெரிஸ்' அமெரிக்காவில் இருந்து வெளிவரும் "அமெரிக்கன் நாட்டிக்கல் அல்மனக்' இந்திய அரசினரால் பன்னிரு பாஷைகளில் வெளிவரும் 'இந்திய அரசினர் பஞ்சாங்கம்' 'லாகிரி இந்தியன் எபமெரிஸ்' "கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கம்' 'மாதஜோதிடம் மணி பஞ்சாங்கம்' 'பாரத் கணித பஞ்சாங்கம்' 'பாலஜோதிடம்' 'வாசன் திருக்கணித பஞ்சாங்கம்' இலங்கையில் வெளிவரும் சிங்கள பஞ்சாங்கங்களான 'எப்பா' 'இறநம' ஆகியவற்றின் கணிப்பின்படியும் சனி விருச்சிக் ராசிக்கு மாற்றமடையவில்லை. வாக்கிய சனி மட்டுமே மாற்றமடைகின்றது. இதிலிருந்து வாக்கிய கணிதத்தின் தரத்தை அறிந்துகொள்ளலாம். இதன்படியான சனிமாற்றமும் நிகழமாட்டாது.

க. சிவச்சந்திரன் திருகோணமலை.

சந்:- திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்த எனக்கு உயர்வு, தாழ்வு மாறிமாறி வருமெனக் கூறுகிறார்கள். இது உண்மையா?

நிவி:- நட்சத்திரத்தை மட்டும் கொண்டு ஒருவரின் பலனைக் கூறமுடியாது. ஒரு நட்சத்திரத்தில் எத்தனையோபேரை எடுத்துக்கொள்ளலாம். அத்தனை பேருக்கும் ஒருபலன் நடக்குமா? நடக்காது. எனவே அவரவர் கிரகநிலைகளை ஆராய்ந்தே பலாபலன் நிர்ணயிக்கவேண்டும்.

எனினும் திருவாதிரை நட்சத்திரத்தைப் பொறுத்தமட்டில் சந்திரன் ராகுவின் நட்சத்திரத்தில் புதன் வீட்டில் இருக்கும். ராகு உயர்வு, தாழ்வுகளை மாறிமாறிக் கொடுக்கக்கூடியவர். புதன் அவதி, துரிதம், நுட்பம், திருப்தியின்மை போன்ற குணங்களைக் கொண்டிருக்கும். சந்திரன் மனத்தைக் குறிக்கும் கிரகம் — மனகாரகன், ஆகவே மனம் எவ்விடயத்திலும் திருப்தியடையாமல், ஏற்றத் தாழ்வுகளை மாறிமாறிப் பெறும் பலன் காட்டுகிறது. இது நட்சத்திரத்துக்கான ஒரு பொதுவான பலனுகும்.

குகேந்திரன் பூநாரிமடம், கொக்குவில்.

சந்:- நான் 16-12-1951 அதிகாலை 3-30க்குக் குவாலாலம்பூரில் பிறந்தேன். ஒருவர் கன்னிலக்கினமென்றும், வேறொருவர் துலாலக்கினம் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் எது சரி? எந்தத்துறை பிரபல்யமாக இருக்கும்.

நிவி:- உங்கள் உதயலக்கினம் 'துலாம்' என்பதே சரி. இயந்திரம் சம்பந்தப்பட்ட துறைகள், வியாபாரம் என்பன பிரபல்யத்தைத் தரும்.

பொ. ஸ்ரீதெய்வகடாட்சம் ராதாஸ், காரைதீவு.

சந்:- ஒருவர் ஜாதகத்தில் சந்திரலக்கினத்தைக் கொண்டு சொல்லும் பலன்களா அல்லது உதய லக்கினத்தைக் கொண்டு சொல்லும் பலன்களா சோதிட முறையாலும் அனுபவரீதியாலும் சரியான பலனையளிக்கிறது.

நிவி.- ஒருவர் ஜாதகத்தில் பலன்களை ஆராயும் போது உதயலக்கினத்தை மையமாகவைத்தே ஆராயப்படவேண்டும். தற்கால பலன்கள் பார்க்கும்போது மகாதசை, புத்தி, கோசாரம் என்பனவும் சேர்த்து ஆராயவேண்டும்.

---

சந்தேகங்களைக் கேட்பவர்கள் போஸ்ட்காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்ட்காட்டில் ஒரு கேள்வி மட்டும் கேட்கலாம்.

"சந்தேக நிவிர்த்தி" சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில், சாவகச்சேரி.

# அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

## தொடர் 2: பிரபஞ்ச உலகின் மீளமைவுத் தன்மையும் கால ஓட்டத்தின் மீளமைவுத் தன்மையும்

இப்பிரபஞ்ச உலகமானது ஒன்பது அம்சங்களாக அமைந்த ஒரேதன்மையான அமைப்பையே கொண்டுள்ளன என்றும், அந்தந்த இடத்தில், அந்தந்த நேரத்தில் கிரகங்களின் தன்மை, இயக்கம், உயிர்ப்புச்சக்தி என்பவற்றை அறிவதன் மூலம் அந்தந்த இடத்தில், நேரத்தில் பிறந்த மனிதனின் சடஉறுப்புக்களைப்பற்றியும் அகஉறுப்பு உணர்வுகளைப்பற்றியும் பூரணமாக அறியமுடியும் என்றும் காலஓட்டத்தின் மீளமைவுத் தன்மைகளை ஆராய்ந்து அவர்களின் வாழ்க்கை எப்படி அமைகின்றதென்றும் அறியமுடியும் என்றும் இக் கிரகங்களிலிருந்து வரும் உயிர்ப்புச்சக்தி அலைகளினுலேயே உயிர்கள் எல்லாம் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்றும் சென்றமுறை பார்த்தோம்.

மேலும் காலத்தின் மாருநியதி ஒன்றுண்டு. ஒருமுறை நிகழும் சம்பவங்கள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப்பின் மீண்டும் நிகழுவதும் ஒரு காலநேரத்தின் தன்மைகள் ஒரு கால இடைவேளையில் மீண்டும் அமைவதுமே அந்நியதியாகும். 1924-ம் ஆண்டின் கூட்டுஎண் 16 ஆகும். எனவே 1924-ம் ஆண்டில் பிறந்த ஒருவருக்கு 16 வருஷங்களின் பின்பு அதாவது 1940-ம் 41-ம் ஆண்டில் ஒரு முக்கிய மாற்றமும், அவ்வாண்டில் அவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்பமும் ஏற்படும். உதாரணமாக எமது நாடான இலங்கை சுதந்திரமடைந்தது 1948ல் ஆகும். இவ்வாண்டின் கூட்டுஎண் 22. எனவே 22ஆண்டை கூட்ட வரும் 1970-ம் 71-ம் ஆண்டில் அரசியலில் ஏற்பட்ட பெரிய மாற்றத்தை நாம் அறிவோம். இதேபோன்று 1956-ம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆட்சிக்கு அவ்வாண்டின் கூட்டு எண்ணுன 21 வருஷங்கள் கழித்து 1977ல் ஏற்பட்ட திருப்பத்தை அவதானிக்கலாம்.

அடுத்து 1-ம் திகதியின் தன்மைகள் 10-ம் 19-ம் 28-ம் திகதிகளில் திரும்பவும் பிரதிபலிக்கின்றன. அதனுல் 1-ம் திகதியில் பிறந்த ஒருவர் இத்திகதிகளில் தருமகருமங்களைச் செய்தால் பல நன்மைகள் கிடைக்கும். மேலும் இத்திகதிகளில் பிறந்தவர்களின் வெளித்தோற்றங்களிலும் குணுதிசயங்களிலும் ஒற்றுமை இருப்பதைக் காணமுடியும். உதாரணமாக இத்திகதிகளிலும் பிறந்தவர்களிடம் ஒரு முதன்மைத் தன்மையை ஒழுங்குபடுத்தும் ஆற்றலைக் காணலாம். எந்தத்தரத்தில் எந்த இடத்தில் இருந்தாலும் அவர்கள் அதிகாரத்தால் கட்டுப்படுத்தப்படமாட்டார்கள். பதிலாக இவர்கள் தாம் இருக்கும் இடத்தில் சூழலில் பலரை ஏவிக் கருமம் சாதிப்பவர்களாக இருப்பர். இவர்களின் சொல்லு அவ்விடத்தில் மேலோங்கி நிற்கும். ஆசாபாசங்கள் அதிகம் இருக்கும்; இந்த அம்சங்கள் ஏதோ இவர்கள் வருந்தித் தேடிக்கொண்டதாக இருந்தால் தாஞகவே அந்தச் சூழ்நிலைகள் அமைந்திருக்கும். இன்னும் எக்காரியத்தையும் தாமே தனித்துநின்று முன்னின்று செய்ய எத்தனிப்பர். கால மீளமைவுத்தன்மையை அதாவது மாருத நியதியை விதிக்கிறோம். இதை உதாரணமாகக் கொள்ளலாம்.

இனி ஒன்பது எண்களைக் குறிக்கும் 9 அம்சங்களை அடக்கியுள்ள இப்பிரபஞ்ச உலகஅமைப்பு நுட்பங்களை சற்று ஆராய்வோம். சூரியனைச் சுற்றியுள்ள புதன், வெள்ளி செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஐந்து கிரகங்களும் சற்றுத் தொலைவில் யுரேனஸ், நெப்ரியூன் ஆகிய கிரகங்களும் இன்னும் அதிக தொலைத்தூரத்துக்கப்பால் புளுட்டோ போன்ற வேறு கிரகங்களும் இருக்கின்றன. இக்கிரகங்கள் எல்லாம் தன்னைத்தானே சுற்றிக்கொண்டிருப்பதோடு தமக்கென்ற பாதையில் தமக்குரிய வேகத்தோடு, சூரியனையும் சுற்றி வருகின்றன. இவற்றின் இயக்கங்கள் எல்லாவற்றையும் சூரியனுக்குச் சார்பாக அதாவது சூரியன் அசைவில்லாமல் இருப்பதாக வைத்துக்கொண்டே விஞ்ஞானிகள் கணித்துள்ளார்கள். சந்திரன் பூமி

யின் ஒரு உபகிரகமாகும். அதாவது சந்திரன் தன்னைத்தானே சுற்றுவதோடு பூமியையும் 28 நாட்களில் சுற்றிவருகின்றது. அது பூமியோடு சேர்ந்து சூரியனையும், சுற்றிவருவதை இங்கு கவனிக்கவேண்டும். பூமியை மையமாகவுள்ள சந்திரனின் சுற்றுவட்டத் தளமும் சூரியனை மையமாகவுள்ள சந்திரனின் சுற்றுவட்டத் தளமும் வேறு வேறு என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

அத்தளங்களிரண்டும் ஒன்ருனல் நாம் ஒவ்வொருநாளும் சூரிய சந்திர கிரகணங்களைப் பெறுவோம். ஆனல் இவ்விரு தளங்களும் வேறுவேறு என்பதால் அத்தளங்களின் சந்திப்புப் புள்ளிகளிலேயே சூரிய சந்திர கிரகணங்கள் நிகழுகின்றன. இந்த இடங்களிலேயே சாயற்கிரகங்களான இராகு கேதுக்களின் தாக்கங்கள் காணப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு கிரகமும் தன்னைத்தானே சுற்ற எடுக்கும் காலத்தை அக்கிரகத்தின் நாள் என்றும் அவை சூரியனைச்சுற்ற எடுக்கும் காலத்தை அவற்றின் வருடம் என்றும் சொல்லப்படும்.

விதியை மதியால்......... (17-ம் பக்கத் தொடர்)

வழிநின்று புனிதன் காட்டிய அறவழியில் சென்று அவசரப்படாமல் ''விதியை மதியால் வெல்வோமாக''

பரந்தாமன் பாரதத்தில் 'நானே எல்லாம்' என்கிருர். இதன் உட்கருத்தை தீர சிந்திப்போமேயானல் ஆட்டுவிப்பவனும், ஆக்குபவனும், அழிப்பவனும் அவனே என்பது பொருள். இது தான் இன்றைய மனிதவர்க்கத்தில் ஆட்டுவிக்கப்பட்டு, ஆக்கலில் ஈடுபட்டு எதிர்நோக்கி அழித்தலை செய்யப்போகும் திவ்ய மூர்த்தியை எங்கள்பால் தயைகூர்ந்து ஆட்டுவித்தலை நிறுத்தி வாழ்வித்தலை செவ்வனே செய்யப்பனே. நீர் புரியும் மாயை இதுவானல் நின்கருணை எங்கள் உள்ளத்தே நிலைக்க நின்புகழ்பாட அருள்செய் தெய்வமே என்று வணங்குகிறேன். வணங்குவோமாக.

கணித சுத்தமும், நுட்பமும் உடையது

திருக்கணித பஞ்சாங்கம்

# ஆய்வு மன்றம்

இ: சாமுண்டீஸ்வரி, கிளிநொச்சி.

உங்களுக்கு 1988-10-29 வரை ராகுதசையில் கேதுபுத்தி நடக்கின்றது. அதன்மேல் வெள்ளி புத்தி ஆரம்பிக்கும். அப்போது திருமணம் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றது. அம்பாளுக்கு அர்ச்சனை, வழிபாடு என்பன மேற்கொண்டு வரவும்.

பொ. இராமலிங்கம், கிளிநொச்சி.

உங்களுக்கு சனி 7-ம், 8-ம் அதிபதியாகி லக்னத்தில் இருப்பது மாரகத்துக்குரியதுதான். சனிதசை 1992-ம் ஆண்டுவரை நடக்கும். சனிதசை பிற்பகுதி கஷ்டபலனுக்குரியதே!

சி. விக்னராசா, தெல்லிப்பழை.

பொதுவாக உங்கள் ஜாதகத்தை ஆராயுமிடத்து கிரகநிலைகள் நன்ருகவே உள்ளன. எனவே மறுபிறவி ஜென்மம் நல்லதாகவே அமையும். இறைவனை மிகவும் பயபக்தியுடன் வழிபட்டு வரவும். நன்மை கிட்டும்.

ஏ. எஸ். ராஜா, நாவற்குடா.

தங்கள் ஜாதகப்படி தற்போது சனிதசை ஆரம்பித்துவிட்டது. கோசரப்படியும் ஏழரைச் சனி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே பொதுவாக அலைச்சலும் நிம்மதிக்குறைவுமிருந்து கொண்டேயிருக்கும். 18-6-88ல் ஏற்படும் குரு மாற்றம் சிறிது நன்மையளிக்கும். தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்த்தல் நன்று.

இ. சிவாகரன், மன்னர்.

தங்கள் விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யப்படவில்லையாதலால் வினக்களுக்கு விடையளிக்க முடியாதுள்ளது.

தி. உமாசுதன், திருகோணமலை.

உங்கள் ஜாதகப்படி 2-ம் வீட்டில் கேது இருக்க சனிபகவான் திருஷ்டிப்பதால் வாக்குத் தானம் பாதிக்கப்படுகின்றது. 1989ல் சந்திரதசையில் குருபுத்தி ஆரம்பிக்கும். குரு வாக்குத்தானத்துக்கு அதிபதியாக இருப்பதனல் இக்காலம் அனுகூலமானதாக இருக்கும்.

ஜெ. ஜெயக்குமாரி, கொழும்பு-7

தங்களுக்கு வெளிநாடு செலலும் யோகம் தற்போது சாத்தியமாகாது. 1989 செப்டெம்பரின் மேல் முயற்சிப்பின் எண்ணம் நிறைவேறலாம்.

வி. கே. கணேஸ்வரன், ராஜகிரிய.

தங்கள் ஜாதகத்தில் ஆறு கிரகங்கள் இரண்டாம் வீட்டில் இருப்பதாகக் கூறுகிறீர்கள். ஆறு கிரகங்கள் மட்டும் இருப்பதைக்கொண்டு நன்மை தீமை கூறமுடியாது. ஒவ்வோர் கிரகமும் எந்தெந்த நட்சத்திர பாதங்களில், என்னென்ன பாகைகளில் இருக்கின்றன என்பதை விரிவாக ஆராய்ந்துதான் பலன் கூறவேண்டும். தரமான கணித சோதிடரிடம் ஆலோசனை பெறவும்.

அ. அரசகுலசேகரன், மானிப்பாய்.

உங்கள் கிரகநிலைப்படி தொழில்ஸ்தானம் அதாவது 10-ம் வீடு சரராசியாக அமைவதால் எத்தொழிலையும் நிரந்தரமாகச் செய்யமாட்டீர்கள், 10-ம் அதிபதி 10-ம் வீட்டை நோக்குவதால் தொழில்நுட்பத்துறை சார்ந்த தொழில்களே அனுகூலமாக இடமுண்டு. எனினும் சனி திருஷ்டிப்பதால் தடைதாமதங்களும் உங்கள் எதிர்பார்ப்பை மழுங்கடிக்கும்.

சு. வசிகரன், சங்கத்தானை, சாவகச்சேரி.

தங்களுக்கு 1988-5-11ன் மேல் குருதசையில் சந்திரன் புத்தி நடைபெறுகின்றது. குரு இலக்கினாதிபதியாகி 9-ம் வீட்டில் இருக்கின்றார். சந்திரன் 12ல் இருக்கின்றார். எனவே தொழில் சம்பந்தப்பட்ட அந்நியநாட்டுப் பிரயாண வாய்ப்பு அனுகூலமாக இடமுண்டு. 10-ம் வீட்டில் சனி இருப்பதால் இயந்திர சாதனங்களுடன் சம்பந்தப்பட்ட தொழிலே சிறப்பானது. 18-6-88இன் மேல் குருமாற்றமும் உங்கள் எதிர்காலத்திற்கு உகந்ததாக அமைகிறது.

பொ. யேசுரட்ணம், கொழும்பு-7

தங்களது கிரகநிலைப்படி 12-ம் வீட்டில் செவ்வாய் ஆட்சிப்பெற்றிருக்கின்றது. இருப்பினும் 12-ம் வீடாக அமைவதால் நற்பலன்கள் அவ்வளவாக இல்லை. ஆயினும் மரணதசையாக அமையமாட்டாது. 8-ம் வீட்டில் சனி இருப்பதனால் நீண்ட ஆயுள் உண்டு.

எஸ். கஜேந்திரன், மட்டக்களப்பு.

தங்களுக்கு 1988-4-22ன் மேல் குருதசை ஆரம்பித்துள்ளது. குரு விரயத்தானாதிபதியாகவும் அமைவதினால் செலவினங்கள் அதிகமாகத்தானிருக்கும். 18-6-88இன் மேல் இடமாற்றம் சாதகமாக அமையலாம்.

---

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில் சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

பிறந்த திகதி: ஆங்கிலம் ..............................................

தமிழ் ..............................................

,, நேரம்: ..............................................

,, இடம்: ..............................................

கிரகநிலை

ஜனனகாலம்.................... தசை இருப்பு

வரு.........மா.........நாள்..........

..............................

கையொப்பம்

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.





மாணவ மணிகளே!

திருக்குறளைத் தினமும் படியுங்கள்

சம்பூரண சலவைக்கு நுரைவளம் கூடிய

மில்க்வைற் நீலசோப்பை

வாங்கி உபயோகியுங்கள்

ஒரு கட்டி விலை ரூபா 3/- மட்டுமே!

500 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி உறையுடன் கூடிய "திருக்குறள்" புத்தகம் ஒன்றை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமல் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பதே எமது அவா. எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படினும் மலரை வாடவிடாமல் பாதுகாக்க வேண்டியது வாசகர்களாகிய உங்கள் கடமையன்றோ; இதுவரை புதிய மலருக்கான சந்தாவைச் செலுத்தாதவர்கள் உடன் சந்தாவைச் செலுத்திப் பதிவு செய்வித்துக் கொள்வதோடு புதியசந்தாகாரர்களையும் சேர்த்து ஊக்கமளிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ 54-00 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 90-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, 192-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருட சந்தா | ,, 237-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 4-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:
உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam. Madduvil, Chavakachcheri. Sri Lanka. Phone: 280